Registered as a Newspaper

# உதயன்

| சுடர் : 37<br>கதிர் : 217 | வெள்ளிக்கிழமை<br>01 ஜுலை 2022 | ஆனி 17 ஆம் நாள்<br>வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16<br>விலை : ரூ. 50 |
|---|---|---|---|

முச்சந்தி முரளி



"பொதுவா தடையை விலக்குறது தான் தலைவரின்ர வேலை.. ஆனால் இஞ்ச நாட்டுத் தலைவரே தடையா இருக்கிறது என்ன மாதிரி டிசைன்?"

# கோத்தாபய விலகுவதே நாடு மீட்சியடைய வழி



ஹர்ஷ டி சில்வா எம்.பி. சுட்டிக்காட்டு
புதிய அணிக்கு சந்தர்ப்பம் வழங்க வலியுறுத்து

**கொழும்பு, ஜுலை 1**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகி, நாட்டை மீட்டெடுக்க புதிய அணியொன்றுக்கு இடமளிக்க வேண்டும். அரசாங்கத்தின் மோசமான தீர்ப்பு மற்றும் பொறுப்பற்ற நடவடிக்கைகளால் ஒட்டு மொத்த நாடும் தற்போது பாதிக்கப்பட்டுள்ளது.** 15 ➤

## லாப்ஸ் விநியோகம்!

யாழ்ப்பாணம், ஜுலை 1
யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு நாளை ஒரு தொகுதி லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்கள் வரும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. 15 ➤



## திருக்கேதீச்சர கும்பாபிஷேகம் நேற்று ஆரம்பம்

மன்னார், ஜுலை 1
வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீச்சர ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா நேற்று ஆரம்பமானது. எதிர்வரும் 6ஆம் 15 ➤

## தொடர் சைக்கிள் திருட்டுக்கள் புதுக்குடியிருப்பில் 6 பேர் கைது



முல்லைத்தீவு, ஜுலை 1
புதுக்குடியிருப்பில் நீண்ட நாள்களாக இடம்பெற்ற சைக்கிள் திருட்டுக்கள் தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும், 15 சைக்கிள்கள் 15 ➤

## பல்டி அடித்தது கோத்தா அரசு!

கட்டார் தொண்டு நிறுவனத்தின் தடையை நீக்க நடவடிக்கை

கொழும்பு, ஜுலை 1
பயங்கரவாத அமைப்பு என்று அறிவித்த "கட்டார் சேரிட்டி" தொண்டு நிறுவனம் மீது இலங்கை அரசாங் 15 ➤

## கோத்தா இருக்கும்வரை நாட்டுக்கு விடிவில்லை!

சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 1
ஜனாதிபதிக் கதிரையில் கோத்தாபய ராஜபக்ச இருக்கும் வரைக்கும் இலங்கைக்குச் சர்வதேசம் உதவ முன்வராது. பொருளாதார நெருக்கடியும் தீராது 15 ➤

## மீளத் திறக்கப்படுகிறது யாழ். விமான நிலையம்

இன்று விமான சேவை இல்லை

யாழ்ப்பாணம், ஜுலை 1
யாழ்ப்பாணம் விமான நிலையம் இன்று மீளத் திறக்கப்படவுள்ளது. ஆயினும் விமான சேவைகள் தற்போது ஆரம்பிக்கப்படாது என்று 15 ➤

## பஸ் கட்டணங்கள் 22% உயர்கின்றன!

ஆகக்குறைந்த கட்டணம் 40 ரூபா

கொழும்பு, ஜுலை 1
நேற்று நள்ளிரவு முதல் பஸ் கட்டணங்கள் 22 வீதத்தால் அதிகரிக்கப் பட்டுள்ளன.
ஆகக் குறைந்த பஸ் கட்டணம் 32 ரூபாவில் இருந்து 15 ➤

## மஹிந்தவுக்குச் "சீரியஸ்" வைரலான தகவல் பொய்

கொழும்பு, ஜுலை 1
முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கடும் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் 15 ➤

## மாணவிகள் துஷ்பிரயோகம் முல்லையில் எதிர்ப்பு பேரணி

முல்லைத்தீவு, ஜுலை 1
முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மாணவிகள் சிலர், ஆசிரியர் ஒருவராலும், சில மாணவர்களாலும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர் என்று கூறப்படும் நிலையில், முல்லைத்தீவு நகரில் நேற் 15 ➤

## அம்பாள்குளத்தில் இளைஞர் சடலம்!

கிளிநொச்சி, ஜுலை 1
கிளிநொச்சி, அம்பாள் குளத்தில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மாலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.
மாங்குளம், ஊற்றுப் புலத்தைச் சேர்ந்த ரகு (வயது-19) என்ற இளைஞரே சடல 15 ➤

## தடுத்துவைக்கப்பட்ட போராளிகளை மறுவாழ்வுத் திட்டத்தில் விடுவிக்குக!

அறிக்கையைக் கையளித்தது
'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணி

கொழும்பு, ஜுலை 1
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட "ஒரே நாடு ஒரே சட்டம்" செயலணி தனது இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது.
அந்த அறிக்கையில், தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் மற்றும் இராணுவத்தினர் உரிய மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் விடுதலை செய்யப்படவேண்டும் என்று தெரிவித்துள்ள செயலணி, சிறுபான்மை மக்களை இலக்கு வைத்துப் பல்வேறு பரிந்துரைகளையும் 15 ➤

## உச்சத்தை தொட்டது நாட்டின் பணவீக்கம்!

கொழும்பு, ஜுலை 1
இலங்கை வரலாற்றில் முதற்றடவையாக பணவீக்கம் எனப்படும் பொருள்களின் விலை அதிகரிப்பு வேகம் 50 வீதத்தைக் கடந்துள்ளது. இந்த மாதம் பணவீக்கம் 54.6% ஆகப் பதிவாகியுள்ளது. 15 ➤

## இந்தியாவிடம் இருந்து 7,500 மெ.தொன் டீசல்!

கொழும்பு, ஜுலை 1
லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்திடமிருந்து 7 ஆயிரத்து 500 மெற்றிக் [illegible] வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கான பணப்பரிமாற்றம் செய்யப்பட் [illegible] 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரச அலுவலர்கள் பெற்றோல் மாபியாவா?

## சங்கானை ப.நோ.கூ.சங்கத்தின் தலைவர் இவ்வாறு கேள்வி

**யாழ்ப்பாணம், ஜூலை 1**

**சித்தங்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அரச அலுவலர்களுக்கு எரிபொருள் வழங்காது மாபியாக்களுக்கே வழங்குகின்றோம் என்று கிராம அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். நாம், நீண்டகாலமாக சீரான பொறிமுறையின் கீழ் அரச அலுவலர்களுக்கு எரிபொருள் வழங்கி வந்துள்ளோம். அப்படியானால் அரச அலுவலர்களைத்தான் எரிபொருள் மாபியா என்கின்றனரா ? என்று கேள்வி எழுப்பியுள்ளார் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கேசவதாசன்.**



சங்கானை பிரதேச செயலகத்துக்கு முன்பாககிராம அலுவலர்கள் நேற்று முன்தினம் தங்களுக்குரிய எரிபொருள் கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது அரச உத்தியோகத்தர்களுக்கு சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குரியதான சித்தங்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் வழங்கப்படாது எரிபொருள் மாபியாக்களுக்கே வழங்கப்படுவதாகத் தெரிவித்திருந்தனர். அவர்களின் குற்றச்சாட்டுத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் எம்முடைய கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் மாத்திரமே காணப்படுகிறது. அங்கு எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் வெளிப்படையாகவே இடம்பெறுகின்றன. சீரான முறையிலே எரிபொருள் வழங்கப்படுகின்றது. கொரோனா காலத்திலும்சரி போர்க்காலத்திலும் சரி குறிப்பட்ட அரச அலுவலர்களுக்கு மாத்திரம் எரிபொருள் வழங்குமாறு வலியுறுத்தப்பட்டபோதிலும், அனைத்து அரச அலுவலர்களையும் சம மரியாதையாகவே நடத்தியுள்ளோம். அவர்களின் தேவைகளை கவனத்தில் எடுத்துள்ளோம்.

அரசாங்கம் அறிவிக்க முன்னரே, எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மீள்நிரப்பு இயந்திரத்தில் ஒன்றை பொதுமக்களுக்காகவும், இன்னொன்றை அரச மற்றும் அவசர தேவை கருதிய நபர்களுக்காகவும் செயற்படுத்தியவர்கள் நாங்கள். அண்மையில் கூட சித்தங்கேணி சந்திமுதல் வடலியடைப்புவரை அரச அலுவலர்கள் ஒழுங்கில் நின்று எரிபொருளை பெற்றார்கள்.

இந்த நிலையில் நேற்று (நேற்று முன்தினம்) இடம்பெற்ற போராட்டத்தில் இவை அனைத்தையும் மறந்து கிராம அலுவலர்கள் நாம் மாபியாக்களுக்கு எரிபொருளை விநியோ கிக்கின்றோம் எனக் கூறியுள்ளனர். எனினும் நான் கேட்க விரும்புவது நாம் இதுவரை காலமும் விநியோகித்த எரிபொருளைப் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் மாபியாக்களா? இதனை கிராம அலு வலர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

சங்கானை பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலர் எம்மை அழைத்து, எமது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வாகனங்களுக்கும் தங்களிடம்தான் அனுமதி பெற்று எரிபொருள் நிரப்பவேண்டும் என்று கூறுகின்றார். கிராம அலுவலர்களுக்கு 4 ஆயிரம் ரூபாவுக்கும், அபிவிருத்தி அலுவலருக்கு 3 ஆயிரம் ரூபாவுக்கும் எரிபொருளை நிரப்பிய பின்னர், தாம் அடையாளப்படுத்தும் நபர்களுக்கே எரிபொருள் வழங்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இவை எந்தவிதத்தில் நியாயமாகும் ? - என்றார்.

(ம-125)

எரிபொருள் பங்கீடு

## மாவட்டச் செயலக சுற்றறிக்கையை செயற்படுத்த முடியாத நிலைமை!

***சங்கானை உதவிப் பிரதேச செயலர் தெரிவிப்பு***

யாழ்ப்பாணம், ஜூலை 1

எரிபொருள் பங்கீடு தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் தீர்மானித்த சுற்றறிக்கையை சங்கானைப் பகுதியில் செயற்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது என்று சங்கானை உதவிப் பிரதேச செயலர் கிருஷ்ணவதனா செந்தூரன் தெரிவித்தார். சங்கானைப் பிரதேச செயலகத்துக்கு எதிராக, சித்தன்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுத் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் காணப்படுகின்ற சித்தன்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எங்களுடைய நடைமுறைக்கு மாறாக இயக்குநர் சபையே முழுமையான தலையீட்டை மேற்கொள்கின்றது. எமது சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் வரிசையில் நின்றும் கூட கடந்த ஒருமாத காலமாக அவர்களுக்குரிய எரிபொருள் வழங்கப்படவில்லை. பொறுமையை இழந்தே எமது உத்தியோகத்தர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வங்கிகள், பொதுமக்கள், அத்தியாவசிய உணவுச் சேவை என்று அனைவருடைய பொதுத்தேவை கருதியும் முன்னுரிமை அடிப்படையிலேயே நான் செயற்பட வேண்டும். நான் என்னுடைய பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே எரிபொருளை விநியோகிக்க வேண்டும் என்று, சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் நினைக்கின்றார்கள், என்னுடைய வேலை அதுவல்ல. உரிய முறையில் பங்கீட்டை மேற்கொள்வதும் பொது மக்களின் நலனை பூர்த்தி செய்வதுமே எனது பணி. நான் சீராகச் செயற்படுவதற்கு சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பூரண ஒத்துழைப்பை எனக்கு வழங்கவில்லை. ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் பிரதேச செயலருடன் இணைந்து கூட்டுறவுச் சங்கங்கள் முன்மாதிரியான முறையில் எரிபொருளை விநியோகம் செய்கின்றன. இது தொடர்பாக நான் மாவட்டச் செயலரிடமும் அறிவித்துள்ளேன் - என்றார்.

(ம- 125)

## சங்கானை பிரதேச செயலகத்துக்கு எதிராக முறைப்பாடு செய்யலாம்

***எரிபொருள் நிரப்பு நிலையத்தினருக்கு வட்டுக்கோட்டை பொலிஸார் ஆலோசனை***

யாழ்ப்பாணம், ஜூலை 1

சங்கானை பிரதேசசெயலகத்தால் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் தலையீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், இதனால் தம்மால் பணிசெய்ய இயலாதுள்ளது என்றும் சித்தன்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் தெரிவித்துள்ள நிலையில், அவ்வாறு தலையீடுகள் இருந்தால் பொலிஸில் முறைப்பாடு செய்யமுடியும் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

விநியோகிக்கப்பட வேண்டிய எரிபொருளின் அளவு நிறைவடைந்த பின்னர், அதி அவசியத் தேவைகருதி வைத்திருக்கும் எரிபொருள் இருப்பைக்கூட விநியோகிக்குமாறு தாம் வற்புறுத்தப்படுகின்றனர் என்று சித்தன்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு நேற்று மதியம் சென்ற பொலிஸ் அதிகாரிகள் இவ்வாறு அவர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளனர். (ம-125)



## ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் நேற்று பெற்றோல் விநியோகம்

மன்னார், ஜூலை 1

தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நேற்று விநியோகிக்கப்பட்டது. இராணுவம் மற்றும் கடற்படையினரின் உதவியுடன் மன்னார் பிரதேச செயலக அலுவலர்களின் மேற்பார்வையில் ரோக்கன் வழங்கப்பட்டு எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளுக்கு ஆயிரத்து 500 ரூபாவுக்கும் ஓட்டோவுக்கு 2 ஆயிரம் ரூபாவுக்கும் கார் உள்ளிட்ட ஏனைய பெற்றோல் வாகனங்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படாத நிலையில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று விநியோகிக்கப்பட்டது.

இதன்போது அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் [illegible] ரோக்கன் பெற்று நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருளைப் பெற்றனர். (ஒ-14.56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் வழங்குமாறு கோரி ஓட்டோ சாரதிகள் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

எரிபொருள் வழங்குமாறு கோரி சங்கானை பஸ் தரிப்பிட வாடகை சேவை ஓட்டோ சாரதிகள் சங்கானை பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாக நேற்றுக்காலை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். "சங்கானை பஸ் தரிப்பு நிலைய வாடகை சேவை வாகனங்களுக்கு எரிபொருளைத் தாருங்கள்", "வேண்டும் வேண்டும் பெற்றோல் வேண்டும்!", "முச்சக்கர வண்டிச் சேவை உங்களுக்குத் தேவை இல்லையா!", "எமது வாழ்வாதாரத்துக்கான எரிபொருளைத் தடை இன்றித் தாருங்கள்!", "எரிபொருள் மாபியாக்களை சட்டத்துக்கு முன் நிறுத்துங்கள்!" போன்ற பதாகைகளை தமது ஓட்டோக்களின் மீது ஒட்டி கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சாரதிகள், மக்களின் அவசர தேவைகளுக்காகச் செயற்படும் எமக்கு வரிசையில் நின்றால் கூட ஆயிரத்து 500 ரூபாவுக்கே எரிபொருள் கிடைக்கின்றது. உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளவர்களை உடனடியாக மருத்துவமனையில் சேர்ப்பதற்கு எமது சேவை மிகமுக்கியமானது. ஆனால், தற்போதைய எரிபொருள் தட்டுப்பாட்டால் எமது சேவையைப் பெறமுடியாமல் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இவ்வாறிருக்க லீசிங்கில் ஓட்டோக்களைக் கொள்வனவு செய்த சாரதிகள் இன்றும் லீசிங் கொடுப்பனவைக் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். எரிபொருள் கிடைக்காமல் நாம் சேவையில் ஈடுபட முடியாது. இதனால் எமது நாளாந்த வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே எங்களுக்கு உரியமுறையில் எரிபொருள் வழங்கப்படவேண்டும். அவ்வாறு வழங்காது பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு எங்களைத் தள்ளிவிடாதீர்கள்- என்றனர். (ஒ-14.125)

# வாடிக்கையாளரின் நலன்கருதி வீட்டிலிருந்தே விளம்பரங்களை உதயனுக்கு அனுப்பும் வசதி!

எரிபொருள் நெருக்கடியால் உங்கள் அபிமான உதயன் பணிமனைக்கு வந்து விளம்பரங்களை கையளிக்க முடியாதுள்ள நடைமுறைச்சிக்கலைத் தீர்க்கும் வகையில்,



இனிமேல் நீங்கள் இருக்குமிடத்தில் இருந்தபடியே உதயனுக்கு விளம்பரங்களை
மின்னஞ்சல்/ வட்ஸப்/ வைபர்
போன்றவற்றின் ஊடாக அனுப்பி வைக்க

விளம்பரக் கட்டணத்தை , வங்கிகளில் நேரடியாகவோ அல்லது ஒன்லைன் மூலமோ வைப்பிட்ட உறுதிச்சிட்டையின் புகைப்படத்தை அனுப்பிவைப்பதனூடாக விளம்பரம் பிரசுரமாவதை உறுதி செய்யலாம்.

வைபர், வட்ஸப் ஊடாக விளம்பரங்களைச் செம்மை பார்க்கும் வசதியும் வழங்கப்படும்.

விளம்பரங்களை அனுப்பவேண்டிய வட்ஸப்/வைபர் இலக்கம்

077 120 9996

மின்னஞ்சல்: advt@uthayan.com


## சிறுமியை காணோம் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசித்துவந்த பாத்திமா ரிமாஸா எனும் சிறுமியைக் காணவில்லை என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை வீட்டில் இருந்த சிறுமி இரவு 10 மணியளவில் காணாமல் போயுள்ளார். அதனையடுத்து குடும்பத்தினரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,125)

# எரிவாயுவுக்கான வரிசைகள் ஓகஸ்ட்டில் குறைவடையலாம்

### லிட்ரோ நிறுவனத் தலைவர் ஆருடம்



**கொழும்பு, ஜூலை 1**

**நாட்டுக்கு இம்மாதம் மாத்திரம் 33 ஆயிரம் மெற்றிக்தொன் எரிவாயுவை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் சமையல் எரிவாயுவுக்கான வரிசைகள் குறைவடையலாம் என லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இம்மாதம் 6ஆம், 10 ஆம், 15 ஆம், 22 ஆம் மற்றும் 24 ஆம் திகதிகளில் நாட்டுக்கு தலா 3 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் வீதம் ஐந்து எரிவாயுக் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன.

எதிர்வரும் ஆறாம் திகதிக்குப் பின்னர் ஒரு லட்சத்து 20 ஆயிரம் சமையல் எரிவாயு கொள்கலன்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளன. அதன்படி நாளொன்றுக்கு 12.5 கிலோ நிறைகொண்ட 80 ஆயிரம் சமையல் எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் நாளொன்றுக்கு சிறிய ரக சமையல் எரிவாயு கொள்கலன்கள் 40 ஆயிரம் விநியோகிக்கப்படவுள்ளன.

இந்த நிலையில் நாட்டில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் எரிவாயுவுக்கான வரிசைகள் குறைவடையலாம் - என்றார். (ச-இ)

## சாவகச்சேரி சங்கக் கிளைகளில் மண்ணெண்ணெய் விநியோகம்

சாவகச்சேரி, ஜூலை 1

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நேற்றுமுன்தினம் கிடைக்கப்பெற்ற 6 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் சங்கத்தின் கிளைக்கடைகளில் விநியோகிக்கப்பட்டது.

சங்க எல்லைப் பரப்பில் 9 ஆயிரத்து 700 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் மூடப்பட்ட கிளைகளைச் சேர்ந்தவர்களும் குறித்த சங்கக் கிளைகளில் இணைக்கப்பட்டதால் கிடைக்கப்பெற்ற 6 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் அனைவருக்கும் பகிர்ந்தளிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே அடுத்த கட்டம் மண்ணெண்ணெய் வரும்போது தற்போது வழங்கப்படாதவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்ட பின்னரே ஏனையோருக்கு விநியோகிக்கப்படும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார். (ஒ-14,9)

### ஆஸி. மெல்பேர்ணில்

## கோ கோத்தா கோ வர்த்தக நிலையம்!




சிட்னி, ஜூலை 1

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் 'கோ கோத்தா கோ' என்ற பெயரில் வர்த்தக நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த சம்பிக்க ஹேவாமத்தும என்ற நபர் இந்த வர்த்தக நிலையத்தைத் திறந்துள்ளார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தும் வகையில் அந்த வர்த்தக நிலையத்துக்கு அவர் இவ்வாறு பெயரிட்டுள்ளார். (ம)




**நேற்று நாடு முழுக்க ஒரே பரபரப்பு. மஹிந்த 'ஆஸ்பத்திரியில' அட்மிட் ஆகியிருக்கிறார் எண்டு வந்த தகவல், போகப் போக ஆளுக்கு சீரியஸாம், 'ஆள் முடிஞ்சுது' எண்டெல்லாம் கண்டபடி பரவத் தொடங்கிட்டு. இப்பிடி வதந்தி ஒரு பக்கம் பரவ, இன்னொரு பக்கம் சில இடங்களில சிங்களச் சனங்கள் 'மஹிந்தவின்ர கதை முடிஞ்சுது' எண்ட தகவலை நம்பி, வெடியெல்லாம் கொளுத்தியிருக்குதுகள். இப்பிடியே வதந்தியைப் பரவவிட்டால், சனங்களே மஹிந்தவுக்கு இறுதிக் கிரியையில இருந்து, திவசம் வரைக்கும் செய்து போடுவினம் எண்டு மஹிந்த தரப்பு பயந்து போச்சு. அதால உடனடியாகவே அவரின்ர ஊடகப்பிரிவு ஆக்கள் ஒரு மறுப்பறிக்கை அனுப்பி, 'மஹிந்த நல்ல சுகமாத்தான் இருக்கிறார்' எண்டு சொல்லிச்சினம். அதுக்குப் பிறகுதான் விசயம் கொஞ்சம் அடங்கினது. இல்லாட்டி இன்னும் தகவல் கண்டபடி பரவியிருக்கும். இதில என்ன பரிதாபம் எண்டால், எந்தச் சிங்களச் சனத்தின்ர தலைவர் எண்டு மஹிந்த நம்பிக்கொண்டிருந்தாரோ, அதே சனம் 'மஹிந்த செத்திட்டார்' எண்ட வதந்தியை நம்பி வெடி கொளுத்திக் கொண்டாடினதுதான். தான் செத்திட்டன் எண்டதை, தன்ர சனமே, தன்ர கண்ணுக்கு முன்னால கொண்டாடுறதை உயிரோட இருந்து பாக்கிறதைவிட ஒரு கொடுமையான தண்டனை ஆருக்கும் கிடைக்குமோ? மஹிந்தவின்ர ஊழ்வினைப்பயனால அவருக்கு அந்தத் தண்டனை கிடைச்சிருக்கு.**

**அதெல்லாம் சரி, இப்பிடி மஹிந்தவுக்கு சீரியஸ் எண்ட கதை சும்மா பரவாது தானே? நெருப்பில்லாமல் ஏன் புகையப்போகுது? எல்லாத்துக்கும் காரணம் இருக்கு. இப்ப சனம் திரும்ப, விலைவாசி, பெற்றோல் தட்டுப்பாடு எண்டு கொதிக்கத் தொடங்கியிருக்குதுகள். இனிமேல் சனம் போராட வெளிக்கிட்டால், மே 9 ஆம் திகதி நடந்ததை விட கடுமையான சம்பவங்கள் நடக்கக்கூடும். அதுக்காக சனத்தை திசை திருப்பவும், ஒரு அனுதாபத்தைப் பெறவும் தான் 'மஹிந்த வருத்தமெண்டு ஆஸ்பத்திரியில இருக்கிறார்' எண்ட கதையை மஹிந்தவின்ர ஆக்களே முதல்ல பரப்ப வெளிக்கிட்டிருக்கினம். உண்மையாகவே ஒரு மெடிக்கல் செக்கப்புக்கு மஹிந்தவும் ஆஸ்பத்திரிக்கு போயிருக்கிறார். அதைவைச்சுத்தான் இந்த வதந்தியின்ர திரைக்கதை எழுதப்பட்டது.**

**ஆனால் மஹிந்த நினைச்சது என்னவோ, நடந்தது என்னவோ. சனங்கள் மஹிந்தவில அனுதாபப்படாமல், அவர் செத்திட்டார் எண்டு கதையை இன்னொரு லெவலுக்கு கொண்டு போய் கொண்டாடுற அளவுக்கு போட்டுது. மஹிந்த பிடிக்க நினைச்சது பிள்ளையாரை, ஆனால் அது குரங்காயெல்லோ போட்டுது.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலிட உத்தரவுப்படி எரிபொருள் வழங்கல்

## கொலன்னாவையில் சர்ச்சை

**கொழும்பு, ஜூலை 1**

**அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலும், உயர் மட்டத்தில் இருந்து அனுப்பப்படுகின்ற பட்டியலுக்கு கொலன்னாவையில் எரிபொருள் வழங்கப்படும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.**

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கொலன்னாவை முனையத்தில் எரிபொருளை பெற்றுக்கொள்ள அதிகளவிலான வாகனங்கள் சென்றிருந்தன.

முனையத்தில் இடப்பற்றாக்குறை நிலவியதால், சில வாகனங்கள் வெளியிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

எனினும், வரிசைகளில் காத்திருக்கும் மக்களுக்கு எரிபொருள் வழங்கும் நோக்கில், கொலன்னாவை எரிபொருள் முனையத்தில் இருந்து ஒரு பவுசர்கூட வெளியேறவில்லை.

அவ்வாறாயின், கொலன்னாவையில் எரிபொருள் யாருக்கு வழங்கப்படுகிறது என்று அறிவதற்காக ஊடகங்கள் அங்குசென்று விசாரணைகளை மேற்கொண்டபோதே மேலிடங்களின் உத்தரவுக்கு அமைய அவர்களால் அனுப்பப்படும் பட்டியலுக்கு எரிபொருள் வழங்கப்படுகின்றமை தெரியவந்துள்ளது.

அதேநேரம் மேலிடத்தில் இருந்து வரும் பட்டியலில் அத்தியாவசியத் தேவைகருதிய விடயங்கள் இல்லை என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)



## எரிபொருள் தட்டுப்பாட்டால்

# கழிவகற்றும் நடவடிக்கை மன்னாரில் முடங்கியது

மன்னார், ஜூலை 1

மன்னார் நகரசபையால் முன்னெடுக்கப்படும் கழிவகற்றும் நடவடிக்கை எரிபொருள் தட்டுப்பாட்டால் முடங்கியுள்ளது என்று மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் தட்டுப்பாட்டால் மன்னார் நகர சபையின் கழிவகற்றும் வாகனங்களுக்கான எரிபொருள்கள் உரிய முறையில் கிடைப்பதில்லை.

எமது பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் கழிவகற்றும் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை எமது கழிவகற்றும் வாகனங்களுக்கான எரிபொருள்கள் முழுமையாகக் கிடைக்காததால் கழிவகற்றும் நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்க முடியவில்லை.

இவ்வாறான நிலை தொடருமாக இருந்தால் மன்னார் நகரப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் சகல விதமான கழிவகற்றும் நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படும். இதனால் மக்களும் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே மன்னார் நகர சபையின் கழிவகற்றும் வாகனங்களுக்குத் தேவையான எரிபொருளை உரிய முறையில் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார். (ஒ-14-60)

# ரூ. 9 லட்சம் பெறுமதியான எரிபொருள் பதுக்கியவர் கைது

கொழும்பு, ஜூலை 1

மஹியங்கனை, கிராந்துருகோட்டையில் 9 லட்சம் ரூபா பெறுமதியான எரிபொருளைப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அரந்தலாவ விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே அதேபகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# சாவகச்சேரி நகர சபையின் கழிவகற்றல் பணியும் நிறுத்தம்

எரிபொருள் தட்டுப்பாட்டால் சாவகச்சேரி நகரசபையின் கழிவகற்றல் பணிகள் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளன.

நகரசபையின் கழிவகற்றல் வாகனங்களுக்கு டீசல் இல்லாத நிலையில் வட்டாரப் பகுதிகள் மற்றும் நகரப் பகுதிகளில் கழிவகற்றும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அத்தியாவசியப் பணிகளின் பொருட்டு வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குமாறு பிரதேச செயலர் மற்றும் எரிபொருள் நிலையத்தினரிடம் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளரும் செயலாளரும் நேற்று நேரில் சென்று கோரிக்கை விடுத்தனர். எனினும் எரிபொருள் தட்டுப்பாட்டால் எரிபொருள் வழங்கப்படவில்லை.

இதனால் எரிபொருள் கிடைக்கும் வரை நகரசபை மேற்கொள்ளும் கழிவகற்றும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய கழிவகற்றும் பணி மீண்டும் ஆரம்பிக்கும் வரை வரியிறுப்பாளர்கள் மற்றும் வர்த்தகர்கள், கழிவுகளை வீதிகளிலும் காணிகளிலும் வீச வேண்டாம் என சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

இதேவேளை சாவகச்சேரி பிரதேசசபையினரும் கழிவுகற்றும் பணிகளை நிறுத்தவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர். (ஒ-14-9)



# எரிபொருள் வழங்குமாறு கோரி கிராம அலுவலர்கள் போராட்டம்

சாவகச்சேரி, ஜூலை 1

எரிபொருள் வழங்குமாறு கோரி தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அலுவலர்கள், பிரதேச செயலக கதவுகளை மூடி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதரவாக பிரதேச செயலகத்தின் களப் பணியாளர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நுணாவிலில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் அத்தியாவசிய சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும் நேற்றுமுன்தினம் எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து கிராம அலுவலர்கள் எரிபொருள் பெறுவதற்காகச் சென்றனர்.

அதன்போது கிராம அலுவலர்களுக்கு பெற்றோல் வழங்க முடியாது என பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர். அதனையடுத்தே அத்தியாவசிய சேவையில் உள்ளவர்களென பிரதேச செயலகத்தால் உறுதிப்படுத்தப்பட்ட கிராம அலுவலர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இது தொடர்பில் தென்மராட்சிப் பிரதேச செயலரைத் தொடர்புகொண்டபோது, குறித்த எரிபொருள் நிலையத்தில் அன்றைய தினம் கிராம அலுவலர்களுக்கு எரிபொருள் வழங்க மாவட்டச்செயலர் அனுமதிக்கவில்லை எனத் தெரிவித்தார். (ஒ-14,9)

# மண்ணெண்ணெய் இல்லாமையால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

## மன்னார் மாவட்ட மீனவர்களின் சம்மேளனத் தலைவர் சுட்டிக்காட்டு

மன்னார், ஜூலை 1

மன்னாரில் மண்ணெண்ணெய் இன்மையால் மீனவர்களின் வாழ்வதாரம் பெரிதளவில் பாதிக்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட மீனவர்களின் சம்மேளனத் தலைவர் யஸ்ரின் சொய்சா சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் எரிபொருள் பற்றாக்குறை மிக மோசமான நிலையில் உள்ளது. மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படகுகளும் 18 ஆயிரத்துக்கு மேற்பட்ட மீனவர்களும் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

எமது மாவட்டத்தில் 4 எரிபொருள் நிலையங்கள் காணப்படுகின்றன. இந்த எரிபொருள் நிலையங்களுக்கு வருகின்ற மண்ணெண்ணெயில் ஒரு பகுதியைத்தான் எமது மீனவர்களுக்கு பகிர்ந்தளிக்கின்றனர். ஏனையவை பொதுமக்களுக்கு என்றும் அத்துடன் தங்களுக்கு விருப்பமானவர்களுக்கு என்றும் வழங்கி வருகின்றனர்.

மாந்தை மேற்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்துக்கு ஒரு மாதத்தில் 6 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணெய் மாத்திரமே வருகின்றது. இதில் ஒரு பகுதி ஆறு மீனவ சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இதற்கமைய மீனவர்கள் ஒரு மாதத்தில் 3 அல்லது 5 லீற்றர் மண்ணெண்ணெய் மாத்திரமே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு காணப்படுகின்றது.

இந்த நிலையில் மீனவர்கள் எவ்வாறு மீன்பிடித் தொழிலை செய்ய முடியும்?

இதேவேளை இந்திய இழுவைப் படகுகளின் வருகையும் மன்னார் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது -என்றார். (ஒ-14-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் நோயாளர்களது உயிர் ஊசலாடுகின்றது

## மருந்துகள் எதுவுமின்றி கையறுநிலை
## தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு, ஜூலை 1**
**தொற்றா நோய்கள் உட்பட பல்வேறு நோய்களுக்கான மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டில் நோயாளர்களின் உயிருக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பில் தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்திக கங்கந்த தெரிவித்ததாவது:-

தனியார் மருந்தகங்களில் கடுமையான மருந்து தட்டுப்பாடு நிலவுகின்றது. மருந்து வகைகள் இருக்கின்றனவா என ஒரு நாளைக்கு சுமார் 300 முதல் 350 தொலைபேசி அழைப்புகள் வருகின்றன.

நாட்டில் புற்றுநோயாளர்கள் மற்றும் இளைப்பு நோயுள்ளவர்களுக்கு மருந்துகள் எவையுமே இல்லை. அறுவைச் சிகிச்சைக்குப் பின் நோயாளிக்கு வழங்கப்படும் வலி நிவாரணிகள் கூட இல்லை. சிறுநீரக நோயாளர்கள் மருந்துகளின்றி அல்லாடுகின்றனர்.

காய்ச்சல் ஏற்படும் குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் இல்லை. நோயாளிகளுக்கு மூக்குவழியாக திரவ உணவை அனுப்பும் குழாய்கள், சிறுநீர் கழிக்க பயன்படுத்தப்படும் வடிகுழாய்கள் என பல்வேறு மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் எவையும் மருந்தகங்களிடம் இல்லை.

அத்துடன் தனியார் மருந்தகங்கள் மற்றும் மருந்துகளை விநியோகிக்கும் வாகனங்களின் உரிமையாளர்களுக்கு தேவையான எரிபொருள் வழங்குமாறு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இவைகுறித்து அரசு உடனடியாக கவனம் செலுத்தாவிடின் நோயாளர்கள் ஒவ்வொருவராக இறக்க வேண்டிய அபாய நிலைக்கு தள்ளப்படுவார்கள் - என்றார். (ச-இ)

# மீன்தொட்டிக்குள் வீழ்ந்து 3 வயதுக் குழந்தை சாவு



கொழும்பு, ஜூலை 1
மீன்தொட்டிக்குள் வீழ்ந்து உயிரிழந்த நிலையில் 3 வயது குழந்தை ஒன்று மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பன்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுகெலே பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

வீட்டின் முன்பகுதியில் மீன் வளர்ப்புக்காக வைக்கப்பட்டிருந்த 2அடி ஆழமான தண்ணீர்த் தொட்டியில் வீழ்ந்தே குழந்தை உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தையின் சடலம் தெல்தெனிய மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# மரத்திலிருந்து தவறி விழுந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூலை 1
பளை, புலோப்பளை கிழக்குப் பகுதியில் பனை மரத்திலிருந்து தவறி விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் நான்கு பிள்ளைகளின் தந்தையான ஞானபிரகாசம் அமலதாஸ் (வயது-56) என்பவராவார்.

குடும்பஸ்தர் சீவல் தொழிலுக்கு சென்றுள்ளார். தொழிலுக்குச் சென்ற கணவரை நீண்ட நேரமாகக் காணவில்லை என மனைவி தேடிச்சென்ற போது பனை மரத்தின் கீழ் விழுந்து கிடக்கக் காணப்பட்டார்.

அதனையடுத்து குடும்பஸ்தர் உடனடியாக மீட்கப்பட்டு பளை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் குடும்பஸ்தரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (ஒ-14,113)

# தென்மாகாணத்தில் வருமான பத்திரத்துக்கு நிவாரண காலம்

கொழும்பு, ஜூலை 1
தென்மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களுக்கான வருமான அனுமதிப் பத்திரத்துக்கு நிவாரண காலம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி இம்மாதம் 29 ஆம் திகதி வரை இந்த நிவாரண காலம் அளிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் காலாவதியான வாகன வருமான அனுமதிப்பத்திரங்களுக்கு தண்டப்பணம் அறவிடாது வாகன வருமான அனுமதிப்பத்திரம் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# எரிபொருள் வழங்குமாறு ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு கோத்தாபய ராஜபக்ச கடிதம்

கொழும்பு, ஜூலை 1
எண்ணெய் கொள்வனவில் ஒத்துழைப்பு வழங்குமாறு கோரி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் என ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டின் எரிபொருள் நெருக்கடியை எதிர்கொள்ள இராஜதந்திர ரீதியில் அணுகும் முகமாக ஜனாதிபதி கோத்தாபய, புடினுக்கு இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

எதிர்வரும் நாள்களில் இரு ஜனாதிபதிகளும் தொலைபேசிமூலம் உரையாடி எரிபொருள் பெறுவது தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் இலங்கை அதிகாரியொருவர் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவுக்கு விரைவில் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை பெறுவது தொடர்பில் ரஷ்ய அதிகாரிகளுடன் கலந்துரையாட கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் சமன் வீரசிங்க ஆகியோர் ரஷ்யா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# நல்லூர் ஆலய மஹோற்சவத்தின் முன்னாயத்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 1
வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாநகர சபையின் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நல்லூர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது பல நடைமுறைகள் விதிக்கப்பட்டன. கடந்த மூன்று வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்ற மஹோற்சவம் இந்த முறை வழமைபோன்று இடம்பெறவுள்ளது.

ஓகஸ்ட் முதலாம் திகதி காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்று வீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு ஓகஸ்ட் 29 ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறக்கப்படும்.

ஆலய நிர்வாகத்தால் சிவப்பு, வெள்ளைக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடைப் பகுதிகளினுள் மாநகர சபையின் தண்ணீர் விநியோக வாகனம் மற்றும் கழிவகற்றும் வாகனம் தவிர வேறு வாகனங்கள் உட்செல்ல முடியாது.

அதேபோல வெள்ளைக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி காணொலி பதிவுசெய்ய முடியாது. காலணிகளுடன் ஆலய வளாகத்துக்குள் பிரவேசிக்க முடியாது.

ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களைச் செய்ய வருகின்ற தூக்குக் காவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் வேளையில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள், யாழ்.மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணிக்கமுடியும். ஆனால் தேர்த்திருவிழா மற்றும் சப்பரத் திருவிழாக்களின்போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும். அத்துடன் இந்தமுறை சுகாதாரக் கட்டுப்பாடுகள் காணப்படாது. ஆனாலும் ஒவ்வொருவரும் தங்களது சுகாதாரத்தில் கவனமெடுத்து செயற்படவேண்டும் என்ற விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

கலந்துரையாடலில் யாழ்.மாநகர முதல்வர் உள்ளிட்ட மாநகர அதிகாரிகள், ஆலய பிரதிநிதிகள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் என பலர் கலந்துகொண்டனர். (ஒ-14,20)

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 1
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் அனுசரணையுடன் முன்னெடுத்து வரும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின்தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் எட்டாவது நிகழ்வு, திருநெல்வேலி தலையாழி ஞான வைரவர் அறநெறிப் பாடசாலையில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சமயப் பிரமுகர்கள் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட, இந்துநாகரிகத்துறை, சிரேஷ்ட விரிவுரையாளர் சி. ரமணராஜா "சமூக வழிகாட்டலில் ஆறுமுகநாவலர்" என்னும் கருப்பொருளில் சிறப்புரையாற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு நாடுகளைத் தேடிச்சென்று உதவிகோர வெட்கமில்லையா?

## கோத்தாபய அரசாங்கத்துக்கு பைசர் முஸ்தபா பளார்

**கொழும்பு, ஜுலை 1**

**கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்தில் முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்படுத்தப்பட்ட அநியாயங்கள் வேறு எந்த அரசாங்கத்தாலும் ஏற்படுத்தப்படவில்லை. இந்தநிலையில் அரபு நாடுகளுக்குச் சென்று உதவி கேட்பதற்கு அரசாங்கம் வெட்கப்படவேண்டும் என சுதந்திரக் கட்சியின் உபதலைவர் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை விநியோகிப்பதில் இந்த அரசாங்கத்தைத் தவிர எந்த அரசாங்கமும் தோல்வியடைந்ததில்லை. இறுதியாக தற்போது அரபு நாடுகளின் உதவியை அரசாங்கம் கோரி வருகின்றது. அரபு நாடுகளிடம் எரிபொருள் உதவி கோருவதற்கு அரசாங்கம் வெட்கப்படவேண்டும். அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஆரம்பத்தில் இருந்தே முஸ்லிம் சமூகத்துக்கு பெரும் அநீதிகளை மேற்கொண்டு வந்திருக்கின்றது. குறிப்பாக கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களின் ஜனாஸாக்களை எரிக்காமல் அடக்கம் செய்ய அனுமதிக்குமாறு அரபு நாடுகள் கூட்டாக ஜனாதிபதியிடம் கோரியிருந்தன. ஆனால், ஜனாதிபதி அவர்களின் கோரிக்கையை நிராகரிக்கும் வகையில் எந்தப் பதிலையும் அவர்களுக்கு வழங்கவில்லை.

இந்த நிலையில் அரசாங்கம் தற்போது எரிபொருள் பிரச்சினைக்கு உதவுமாறு அரபு நாடுகளைக் கேட்டுவருகின்றது. நாடு தற்போது எதிர்கொண்டுள்ள எரிபொருள் பிரச்சினைக்கு அரபு நாடுகள் உதவி செய்யவேண்டும் என்பதே எமது கோரிக்கை. ஆனாலும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பார்த்து எந்த நாடும் எமக்கு உதவப்போவதில்லை - என்றார். (ம)

### இலங்கைக்கு உதவுங்கள்

# நாணய நிதியத்தை சஜித்தும் கோரினார்

கொழும்பு, ஜுலை 1

நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பைக் கோரி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே, 'பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் இலங்கைக்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கையை நாணய நிதியத்திடம் விடுக்கின்றேன்' என்று சஜித் தெரிவித்துள்ளார்.

இருதரப்புக்கும் இடையே ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதோடு, நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தணிக்கத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாக சர்வதேச நாணய நிதியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினர் இதன்போது தெரிவித்தனர். (ம)



# ஹெரோய்னுடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஜுலை 1

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் பகுதியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சண்டிலிப்பாய் சீரணி அம்மன் கோயிலருகில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருப்பதாக மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியை சோதனையிட்ட போது 34 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அத்துடன் அவரிடமிருந்து 50 மில்லிகிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டது.

அதனையடுத்து இளைஞருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய மானிப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-14-125)

# கோத்தாவை விரட்டாமல் போராட்டங்கள் ஓயாது!

## ஜே.வி.பி. சூளுரை

கொழும்பு, ஜுலை 1

அராஜக ஆட்சி நடத்தும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும். அதுவரை நாம் ஓயப்போவதில்லை எமது ஆட்டம் தொடரும்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வீடு செல்ல வேண்டும் என்று மக்களால் வலியுறுத்தப்படுபவர்தான் கோத்தாபய. மக்களால் விரட்டியடிக்கப்பட்டவர்தான் ரணில். இவர்கள் இருவராலும் நாட்டை ஆள முடியாது. மக்களுக்கு நல்லதைச் செய்ய முடியாது.

சர்வதேசம் எமது நாட்டுக்கு உதவும். ஆனால், எம்மைத் தூக்கி விடாது. நாம்தான் எழ வேண்டும். அதற்கான அரசியல் தலைமைத்துவத்தை வழங்க தேசிய மக்கள் சக்தி தயார். தேர்தல் நடத்தப்படும் வரை இடைக்கால அரசைப் பொறுப்பேற்கவும் நாம் தயார்-என்றார்.

(அ-எ-22)

# வெளிநாட்டுத் தொழிலாளர்களால் நாட்டின் பொருளாதாரம் மீளுமாம்

கொழும்பு, ஜுலை 1

வெளிநாட்டுத் தொழிலாளர்களால் இலங்கையின் பொருளாதாரம் மீட்கப்படும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என்று தெரிவித்தார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகில் அதிகமான நாடுகள் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடையும்போது அந்த நாடுகளின் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் பணம் அனுப்பி நாட்டைப் பாதுகாத்தார்கள். அதேபோன்று வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்கள் நாட்டுக்காக பணம் அனுப்பி நாட்டை மீட்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. நாட்டுக்கு டொலர் பெற்றுக்கொள்ள இருக்கும் இலகுவான வழி வெளிநாட்டு தொழிலாளர்களிடமிருந்து கிடைக்கும் வருமானமாகும் -என்றார்.

(ம)

# கொள்ளையடித்த நிதியை தந்துவிட்டுச் செல்லுங்கள்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியில் இருக்கும் வரையில் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது. ராஜபக்சக்கள் முழுமையாக அரசியலில் இருந்து நீங்க வேண்டும். அத்துடன் 300 வருடங்களுக்குத் தேவையான அளவு கொள்ளையடித்து வைத்துள்ள அவர்கள் அந்த நிதியை மீண்டும் தந்துவிட்டுச் செல்லவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் விநியோக கட்டமைப்பின் பாதிப்பு முழு நாட்டின் நிர்வாக கட்டமைப்பையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் விலையேற்றத்தை தொடர்ந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் ஒட்டு மொத்த மக்களும் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

எரிபொருள் விநியோகக் கட்டமைப்பில் இருந்து இலங்கை அரசாங்கம் விலகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை, சுற்றுலாத்துறை சேவை மற்றும் கைத்தொழிலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எரிபொருள் பாதிப்பு தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அமைச்சரவை முன்கூட்டியே அறியவில்லையா? நாடு தற்போது எதிர்கொண்டுள்ள மிக மோசமான நிலைமைக்கு குறுகியகாலத் திட்டங்கள் தீர்வாக அமையாது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை பதவியில் வைத்துக்கொண்டு எந்தப்பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியாது. நாட்டின் தற்போதைய நெருக்கடியான நிலைமைக்கு ஜனாதிபதியின் தவறான நிர்வாகமே மூலகாரணியாக அமைந்துள்ளது. இலங்கை வங்குரோத்து நிலைமையினை அடைந்துள்ளது என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி வெளியிடும் கடன் பற்று பத்திரம் மீது சர்வதேச நிறுவனங்கள் நம்பிக்கை கொள்ளாத நிலைமை காணப்படுகிறது. இன்னும் சில நாள்களில் வங்கிக் கட்டமைப்பும் பாதிக்கப்படும் நிலை காணப்படுகின்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை சர்வதேசம் ஒருபோதும் அங்கீகரிக்காது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கையும் இல்லாதொழிந்துள்ளது. பதுங்கு குழிகளில் பதுங்கியிருந்த ராஜபக்சக்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புத்துயிரளித்துள்ளார்.

ஜனாதிபதி பதவி விலகினால் நாடாளுமன்றில் 24 மணித்தியாலத்துக்குள் இரகசிய வாக்கெடுப்பின் ஊடாக ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய முடியும். அல்லது ஜனாதிபதி பதவி இடம்பெறும் வரை பதில் ஜனாதிபதி ஒருவரை நியமித்துக்கொள்வது குறித்து அரசமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவி வகிப்பதால்தான் பிரச்சினைகள் நாளாந்தம் தீவிரமடைகின்றன - என்றார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாளொரு நல்வார்த்தை

"தீமையை நன்மையால் வெல்லுங்கள். பொய்யை உண்மையால் வெல்லுங்கள்" - புத்தர்

## ' கப்சாவாகிப்' போன கனவுகள்

ஜூலை 22ஆம் திகதி வரையில் பெற்றோல் கப்பல்கள் எவையும் நாட்டுக்கு வரப்போவதில்லை அது வரையில் நெருக்கடி தொடரும்' என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். அவர் பிரதமராகப் பதவியேற்ற பின்னர் நாட்டு நிலைமையை, உண்மையைச் சொல்கின்றேன் பேர்வழி என்ற அடிப்படையில், எதிர்காலத்தில் தட்டுப்பாடு வரும், மோசமான நிலைமையை எதிர்கொள்ளப் போகின்றோம் என்ற குடுகுடுப்பைக்காரனின் அறிவிப்பைப்போன்று, அச்சமூட்டும் எதிர்வுகூறல்களை மாத்திரம் சொல்லிக் கொண்டிருக்கின்றார்.

பிரதமராக ரணில் பதவியேற்றால் சர்வதேச நாடுகள் எல்லாம் இலங்கைக்கு அள்ளிக் கொடுக்கும், எரிபொருள் விலை குறையும், மீண்டும் நல்ல காலம் பிறக்கும் என்றெல்லாம் ரணில் ஆதரவாளர்கள் அடித்துவிட்ட பல்லாயிரம் கனவுகளும், வெறும் 'கப்சா'க்களே என்பதை காலம் உணர்த்தத் தொடங்கியிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியில் இருந்தபோது, நாடாளுமன்றத்தில் கடந்த மார்ச் மாதம் இறுதிப் பகுதியில் உரையாற்றுகையில், இந்திய உதவி மே இறுதி வாரத்துடன் அல்லது ஜூன் தொடக்கத்துடன் முடிவடைந்துவிடும். அதன் பின்னர் எரிபொருளுக்கும், மருந்துக்கும், உணவுக்கும் அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது ? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

எதிரணியிலிருக்கும்போதே, நாட்டின் நிலைமையைத் தெரிந்துகொண்ட ரணிலால், ஆட்சிக்கு வந்த பின்னர் இந்திய உதவி முடிவடையும் தறுவாயில் மாற்று வழி எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. மாறாக எதிரணியில் இருந்தபோது சொன்னதையே இப்போது பிரதமராகியும் சொல்லிக் கொண்டிருக்கின்றார். அவரது இடம் மாறியிருக்கின்றதே தவிர, நாட்டு நிலைமை மாறவில்லை.

எரிபொருள் நெருக்கடியின் ஆரம்பக்கட்டமே இப்படி என்றால், இன்னமும் 22 நாள்களுக்கு பெற்றோல் இல்லாத நிலைமையில் நாடு அல்லோலகல்லோலப்படப்போகின்றது. அத்தியாவசிய சேவையினருக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசாங்கம் அறிவித்திருந்தாலும், அவர்களுக்குகூட முழுமையான சேவையை வழங்கும் அளவுக்கு நாட்டில் எரிபொருள் கையிருப்பு இல்லை. இந்த நிலையில் முதலாம் வார முடிவில், அத்தியாவசியத் தரப்பினரும் எரிபொருளுக்காக வீதிக்கு வரும்போது நாடே ஸ்தம்பிக்கும் நிலைமைதான் ஏற்படப் போகின்றது. மருத்துவமனைகளுக்கு நோயாளிகளைக் கொண்டு செல்ல முடியாத நிலைமை, மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க சுகாதார ஆளணியினர் செல்ல முடியாத நிலைமை என்று மிக மோசமான ஒரு நிலைமைக்குள் நாடு செல்லப்போகின்றது.

இதையெல்லாம் உணர்ந்து, இதற்குத் தீர்வு தேட வேண்டிய அரசாங்கமோ, பட்டினி வரப்போகின்றது, நெருக்கடி வரப்போகின்றது என்ற அறிவிப்பை மாத்திரம் விடுத்துக் கொண்டிருக்கின்றதே தவிர, அதிலிருந்து மீள்வதற்கான வழிவரைபடங்களைக் கண்டுபிடிக்கத் தயாரில்லை.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியிலிருந்து விலகாத வரையில், இப்போதுள்ள ஆட்சி முறைமையில் மாற்றம் ஏற்படாத வரையில் எந்தவொரு நாடும் உதவாது என்ற இராஜதந்திரி தயான் ஜயதிலகவின் கருத்து யதார்த்தமானது.

அந்த உண்மையைத் தெரிந்திருந்தும், தோற்றுப் போன ஜனாதிபதியாக பதவி விலகமாட்டேன் என்று சொல்லிக் கொண்டு நாட்டு மக்களை புதைகுழியில் தள்ளுவதைத்தான் ஜனாதிபதி கோத்தா செய்யப்போகின்றார். ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்களின் எதிர்ப்பு கிளர்ச்சியாக மாறுவதற்கு முன்னர் -அது குருதிக்களரியாக மாறுவதற்கு முன்னதாக நாட்டில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் அதிசயம்தான். அப்படி ஓர் அதிசயம் நிகழாவிட்டால், இலங்கை தன் மகிழ்ச்சியை நிரந்தரமாக இழந்துவிடும்.




# ஐ.எம்.எப்.இன் ஒப்பந்தத்தின்பின் உலக வங்கியின் ஆதரவு கிட்டும்

## உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் உறுதி

கொழும்பு, ஜூலை 1

**சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கை ஏற்பட்டதன் பின்னர் உலக வங்கியின் மேலதிக நிதியுதவித் திட்டங்கள் இலங்கைக்கு வழங்கப்படும் என உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஃபாரிஸ் ஹடாட்செர்வோ ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் உறுதியளித்துள்ளார்.**

WORLD BANK

உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இடையில் கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது நாட்டின் தற்போதைய நிலைமையை விளக்கிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விவசாயம், கால்நடைகள், சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் வர்த்தகங்களில் ஈடுபடும் மக்களுக்கு குறைந்த வட்டியில் நிதியுதவிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் கூறுகையில்,

உலக வங்கியின் நிதியுதவியில் 17 திட்டங்கள் நடந்து வருகின்றன. அதில் உள்நாட்டு எரிவாயு மற்றும் உர விநியோகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் தற்போதைய நெருக்கடியை எதிர்கொள்ள நிதியுதவிகளை வழங்குவதற்கான திட்டங்கள் மறுவடிவமைப்பு செய்யப்படுகின்றன.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைக்கு வந்ததன் பின்னர் உலக வங்கி மேலதிக ஆதரவை வழங்கும் - என்றார். (ச-இ)

# 22 ஆம் திருத்த வரைவு வர்த்தமானி வெளியீடு!

கொழும்பு, ஜூலை 1

அரசமைப்பின் 22 ஆவது திருத்த வரைவுக்கான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச இந்தத் திருத்தவரைவை அமைச்சரவையில் சமர்ப்பித்து அது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில், அந்தத் திருத்த வரைவு தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இரட்டைக் குடியுரிமை பெற்றவர் நாட்டின் நிர்வாகத்தில் பங்கேற்க முடியாமை, ஜனாதிபதியை நியமிப்பதில் கவனிக்க வேண்டிய விடயங்கள் பிரதமரின் பதவியின் அதிகாரம் மற்றும் தன்மை, புதிய ஆணைக் குழுக்கள் மற்றும் அமைச்சர்கள் சபை எவ்வாறு அமையும் என்பன குறித்தும் விரிவான விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. (ம)

நாளை
02.07.2022
சனிக்கிழமை
ஆனி 18
சுபநேரம் : 02.56 - 04.26
ராகுகாலம்: 08.56 - 10.26
மடுமாதா பெருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளையின் உளவிருத்தியில் பெற்றோரின் வகிபங்கு

சி.நற்குணலிங்கம்

> குழந்தையிடம் நீங்கள் உண்மை பேச வேண்டும். பொய் சொல்லக் கற்றுக் கொடுக்கக் கூடாது. குழந்தை சிறுதவறு செய்யும்போது கடுமையான தண்டனைக்கு உட்படுத்தக் கூடாது. அதிக தடைகளைப் போடாதீர்கள். பிள்ளை ஏதும் குழப்பம், குழப்படி செய்தால் அவை தொடர்பாக திரும்ப திரும்ப கேள்விகளைக் கேட்டு அதட்டுவது தவிர்க்கப்படவேண்டும்.

உடல் நலத்தைப் பாதுகாக்கவும், சமூகத்தில் திறமையுடன் செயற்படவும் இன்றியமையாத அடிப்படைக்கூறு உளநலமாகும். உளநலத்துடன் பிள்ளைகளை வளர்ப்பதென்பது இலகுவான விடயமல்ல. ஆனால் பெரும்பாலான பெற்றோர்கள் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதென்பது ஒரு சாதாரண விடயம் என நினைப்பது பொதுமைக்கருத்து. பிள்ளைகளின் வளர்ச்சிப் பருவங்கள் ஒவ்வொன்றினதும் கற்றல் நிகழ்வுகள் மிகப்பெரும் தாக்கத்தை பிள்ளைகளின் உளத்தில் ஏற்படுத்துகின்றன. அதாவது கற்றலுக்கான அகப்புறத் தூண்டிகளின் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆரோக்கிய வாழ்வுக்கு உளநலம் முக்கியம். எனவே உளவிருத்திக்கு தீமை செய்யலாமா?

**பிள்ளையின் உளவிருத்தி தாயின் கருவில் ஆரம்பம்**

குழந்தையின் கற்றல் நடத்தை மட்டுமன்றி உளவிருத்தியும் தாயின் கருவிலே ஆரம்பிக்கப்படுகின்றதென்பது ஆய்வுகளின் முடிவாகும். தாயின் ஆரோக்கிய வாழ்வு, பழக்கவழக்கங்கள், மனவெழுச்சி நிலைகள் என்பன குழந்தையின் உளத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கருவைச் சுமக்கும்போது தாய்க்கு ஏற்படும் ஏக்கங்கள், தாக்கங்கள், வலிகள், இழப்புக்கள், இடர்கள், அபாய அறிவிப்புக்கள் என்பனவும் உளவிருத்தியைப் பாதிப்பதினூடாக மெல்லக் கற்கக்கூடிய பிள்ளைகளைத் தோற்றுவிக்கின்றன. எனவே குழந்தையைக் கருவுற்றதில் இருந்தே பேணி வளர்க்க வேண்டியது முக்கியம் மிக்கதாகும். பிள்ளைக்குப் பொருத்தமற்ற சூழல் வீட்டில் காணப்படக்கூடாது. பெற்றோர் குழந்தைகளுடன் பொழுதைக் கழிக்கும்போது அறிவுப் பசிக்கும் உணவளிப்பவர்களாகத் தொழிற்பட வேண்டும். வேலைக்குச் செல்லும் பெற்றோரில் பெரும்பாலனவர்கள் தமது பெற்றோரிடமும், பராமரிப்பாளரிடமும் தமது பிள்ளைகளை விட்டுச் செல்வதால் குழந்தையின் உளவியல் தேவைகள் எவை என்பதை சரியாகப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தாது விடுவதும் குழந்தையின் உள விருத்தியில் பாதிப்பை ஏற்படுத்தகின்றன.

பிள்ளைகளுக்கு இடைஞ்சல்கள், தவறுகள் என்பன பெற்றோர்க்கு தெரியாவண்ணம் அயலவர்கள், உறவினர்களால் இணைக்கப்படுவதும் பிள்ளைகளின் உளநலத்தைப் பாதிக்கின்றது. பிள்ளைகளுக்குத் தேவையானவற்றை உரிய வேளைகளில் வழங்காது தவிர்த்துக் கொள்வதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**நேர்மறையான அணுகல் மிகமிக அவசியமானது**

குழந்தையிடம் நீங்கள் உண்மை பேச வேண்டும். பொய் சொல்லக்கற்றுக் கொடுக்கக்கூடாது. குழந்தை சிறு தவறு செய்யும்போது கடுமையான தண்டனைக்கு உட்படுத்தக்கூடாது. அதிக தடைகளைப் போடாதீர்கள். பிள்ளை ஏதும் குழப்பம், குழப்படி செய்தால் அவை தொடர்பாக திரும்ப திரும்ப கேள்விகளைக் கேட்டு அதட்டுவது தவிர்க்கப்படவேண்டும்.

அவ்வாறு செய்தால் பிள்ளை கலக்கமடைந்து பொய் சொல்ல ஆரம்பிக்கும். பிள்ளைகள் எந்த வழியில் பாதிக்கப்பட்டாலும் ஒட்டுமொத்த சமூகமே நாளை இருட்டுக்குள் தள்ளப்பட்டுவிடும் என்பதை மறந்துவிடாதீர்கள். பிள்ளைப் பருவத்திலே எற்படும் உளத்தாக்கங்களால் பிள்ளையின் இளமை வளம் சட்டவிரோத சமூக எதிர் செயற்பாடுகளிலும் கழிந்து போகும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். அதற்குப்பெற்றோரே துணை போகாதீர்கள். பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்காமை, பிள்ளைகளின் நடத்தை மாற்றங்களில் அதீத அக்கறை காட்டாமை, குடும்ப வாழ்வியல் நெறிமுறைமை, தளம்பலுற்று தடம்புரண்டு காணப்படுதல் காரணமாகின்றது. வாழ்க்கையின் ஆரம்பப்புள்ளியாக இருப்பது சிறுபராயம்தான். அந்தப்பராயத்தில் இவ்வாறான இன்னல்களுக்குப் பிள்ளை உட்படுமாயின் சேதாரம் மிக்க வாழ்வே அவர்களுக்குப் பரிசாகக் கிடைக்கும். பெற்றோர் முன்மாதிரியான நடத்தைக் கோலங்களைப் பின்பற்றாது வாழ்வார்களாயின் அவை பிள்ளையின் நடத்தையிலும் பிரதிபலிக்கும் உங்கள் நடத்தையின் மூலம் சரியான நியமங்களை பிள்ளை கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். இல்லையேல் பிறரிடமிருந்து தவறான விடயங்களை, தகவல்களைப் பெற்று அதன் விளைவாக தவறான பாதையில் சென்று உளம் சீர்கெட்டு குழந்தைகளின் உள்ளத்தில் வன்முறையான சிந்தனைகள் முளைவிடத் தொடங்கும்.



**ஒவ்வொரு பிள்ளையிலும் ஒவ்வொரு தனித்துவம்**

குழந்தைகள் எப்போதும் பெற்றோரின் மனநிலைக்கு வரவேண்டும் என நினைத்து செயற்படுதல், அவர்களுக்குப் பிடித்த விடயங்கள்பற்றி அவர்களுடன் பேசாதிருத்தல், அவர்களை நண்பர்களாக ஆக்கிக் கொள்ளாமை, எப்போதும் படிப்பைப்பற்றியே பேசிக் கொண்டிருத்தல், பிள்ளை விளையாடுவதற்கான சந்தர்ப்பங்களை தவிர்க்க முயற்சித்தல், பிள்ளை தவறுசெய்தால் அந்தத் தவறை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படாதிருத்தல். இவ்வாறான சிறுசிறு விடயங்களில் பெற்றோர் விடும் தவறுகளால் பிள்ளைகள் உளத்தாக்கமடைகின்றனர். உங்கள் 'அதிரடி' அணுகுமுறைகளில் கொஞ்சம் மாற்றத்தை ஏற்படுத்தித்தான் பாருங்களேன். குடும்பத்தின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலுமே ஒரு சமூகம் தங்கியுள்ளதென்பதைப் பெற்றோர் மனதில் விதைத்துக் கொள்ள வேண்டும்.

பிள்ளையை இன்னொரு பிள்ளையுடன் ஒப்பிட்டுப் பேசும் பழக்கம் இன்று தாராளமாகவே காணப்படுகின்றது. பெற்றோரின் இந்தப் பழக்கத்தால் பிள்ளை தன்னையறியாமல் பாதிப்புக்கு உட்படுகின்றது. ஒருவனுக்கான ஆலோசனையோ அல்லது அறிவுரைகளோ அல்லது புத்திமதிகளோ அவன் சார்ந்ததாகவும் அவனது சுபாவம் சார்ந்ததாகவும் இருக்கவேண்டுமேயேன்றி ஏற்படும் பொறிமுறையாக இருக்கக் கூடாது. பொறுமையுடனும் பொறுப்புடனும் பிள்ளைகளின் விடயங்களைக் கையாள வேண்டும். "செயற்படுத்தி முடிக்கும் வரை சில விடயங்கள் எப்பொழுதும் சாத்தியமற்ற தொன்றாகவே காட்சிதருவதுண்டு" என தென்னாபிரிக்கக் குடியரசின் தந்தை நெல்சன் மண்டேலா கூறியுள்ளார். எனவே அவசரப்பட்டு பிள்ளையின் விடயத்தில் முடிவுகளை மேற்கொள்ளக்கூடாது. தாயானவள் பிள்ளை மீது சரியான அக்கறை கொண்டு வளர்க்க வேண்டும். இல்லையேல் இல்லறம் சிறக்காது. அளவிட முடியாத தியாக உணர்வு கொண்ட தாயானவள் தன் கண்களை விளக்காகவும், கைகளை தொட்டிலாகவும், குருதியை பாலாகவும் பிள்ளைக்கு வழங்கி வளர்த்துவருகையில் பிள்ளையின் உளநலத்தில், உளவிருத்தியில் அக்கறை காட்டவில்லையாயின் பிள்ளையின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** தேவைக்கேற்ற வருவாய் வந்து சேரும். மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய முயற்சிகள் பயன் தரும். நண்பர்களின் ஆதரவுடன் உங்களின் எண்ணம் நிறைவேறும். சகபணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**இடபம்:** விலகிச் சென்றவர்கள் மீண்டும் உங்களைத் தேடி வருவர். உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். வீடு, வாகனம் வாங்கும் முயற்சி பலிதமாகும்.

**மிதுனம்:** குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் சரியாகும். மனக்குழப்பம் விலகும். எதிர்பாராத செலவு தோன்றும். பணத்தேவை அதிகரித்து உங்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும்.

**கடகம்:** எதிர்பார்த்த செய்தி வரும். உங்களது முயற்சியால் நினைத்ததை அடைவீர்கள். வெளிவட்டாரத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். ஓய்வின்றி உழைப்பீர்கள். எண்ணம் நிறைவேறும்.

**சிம்மம்:** உற்சாகத்துடன் செயற்பட்டு உங்கள் இலக்கை அடைவீர்கள். பண வரவு உண்டாகும். எதிர்பார்த்த செய்தி வரும். தொழிலில் புதிய அணுகுமுறையைச் செயற்படுத்தி லாபம் காண்பீர்கள்.

**கன்னி:** வியாபாரத்தில் ஏற்பட்ட போட்டிகளை சமாளித்து வெற்றி அடைவீர்கள். உங்களின் முயற்சி நண்பர்களின் ஆதரவுடன் வெற்றியாகும். லாபம் அதிகரிக்கும். சிவபெருமானை வழிபட மனதில் தெளிவு பிறக்கும்.

**துலாம்:** நண்பர்களாலும் உங்களைப் புரிந்துகொள்ள முடியாமல் போகும். நெருக்கடியான நாள். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினைகளைச் சந்திப்பீர்கள். மனச்சோர்வு அதிகரிக்கும். முயற்சிகள் இழுபறியாகும்.

**விருச்சிகம்:** இன்று மாலை வரை எச்சரிக்கை அவசியம். யாரிடமும் வீண் விவாதம் செய்யவேண்டாம். பணியிடத்தில் உங்களைச் சிலர் சீண்டிப் பார்ப்பார்கள். அமைதி காப்பது நல்லது. கடவுள் வழிபாடு இன்னலை அகற்றும்.

**தனுசு:** உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மகிழ்ச்சியான நாள். பணியாளர்கள் தாங்கள் விரும்பிய இடமாற்றத்தை அடைவார்கள். தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு எண்ணியதை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

**மகரம்:** நீண்டநாள் பிரச்சினை தீரும். உற்சாகமுடன் செயற்பட்டு லாபம் காண்பீர்கள். பயணத்தால் பயன் காண்பீர்கள். குடும்பப் பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். தடைகள் விலகும்.

**கும்பம்:** நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். உங்களின் செல்வாக்கு உயரும் நாள். தொழிலில் ஏற்பட்டிருந்த தடைகளை சரி செய்வீர்கள். குடும்பத்தினர் உதவி செய்வர். திருப்பங்கள் நிறைந்த நாள்.

**மீனம்:** அந்நியர்களின் ஆதரவுடன் ஆதாயம் காண்பீர்கள். வாகனம் வாங்கும் முயற்சி பலிதமாகும். பிறரால் மகிழ்ச்சிக்குரிய சம்பவம் ஒன்று நடைபெறும். உங்கள் எண்ணம் ஈடேறும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்.

## பிலிப்பைன்ஸில் மீண்டும் சர்வாதிகார ஆட்சியா?

*அதிபரானார் மார்கோஸ் ஜூனியர்*

மணிலா, ஜூலை 1

பிலிப்பைன்ஸின் முன்னாள் சர்வாதிகாரியான பெர்டினாண்ட் மார்க்கோஸின் மகனான பெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியர் பிலிப்பைன்ஸ்ஸின் அதிபராகப் பதவியேற்றுள்ளார்.

பிலிப்பைன்ஸின் அதிபர் பதவியில் இருந்து டுடேர்தே விலகியதையடுத்து நடைபெற்ற தேர்தலில் மார்கோஸ் ஜூனியர் வெற்றிபெற்று அதிபராகப் பதவியேற்றுள்ளார். பதவியேற்பு விழா பிலிப்பைன்ஸின் தேசிய அருங்காட்சியகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியர், பிலிப்பைன்ஸில் சர்வாதிகாரமாக ஆட்சி செய்த பெர்டினாண்ட் மார்கோஸின் மகன் ஆவார்.

மார்கோஸ் ஜூனியரின் தந்தையான பெர்டினாண்ட் மார்கோஸ் பிலிப்பைன்ஸை சுமார் 20 ஆண்டுகளாக ஆட்சி செய்தார். பெர்டினாண்ட் மார்க்கோஸ் ஆட்சியில் நீதிமன்றங்கள், வணிகங்கள், ஊடகங்கள் என அனைத்தும் அவ்ரது காட்டுப்பாட்டில் இருந்தன. அவரை எதிர்த்த அரசியல் எதிரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## பிலிப்பைன்ஸில் எதேச்சதிகாரம்

# நோபல் வென்றவரின் ஊடகம் மூடப்பட்டது

**மணிலா, ஜூலை 1**

**அமைதிக்கான நோபல் பரிசில் வென்றவரான பிலிப்பைன்ஸின் எழுத்தாளர் மரியாவின் செய்தி நிறுவனமான ராப்லரரை மூடுவதற்கு பிலிப்பைன்ஸ் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளமை சர்வதேச அரங்கில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.**

சர்வதேச ஊடக விதியை ராப்லர் மீறிவிட்டதாக பிலிப்பைன்ஸ் அரசு தெரிவித்துள்ளது. பிலிப்பைன்ஸ் அதிபர் பதவியிலிருந்து ரொட்றிகோ டுடேர்த்தே விலகுவதற்கு ஒரு நாள் முன்னதாக இந்த உத்தரவை பிலிப்பைன்ஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது. எனினும் ராப்லர் செய்தித்தளம் தொடர்ந்து இயங்கும் என்று மரியா உறுதிப்பட தெரிவித்துள்ளார்.

தடை குறித்து ராப்லர் ஊடகம் வெளியிட்ட அறிவிப்பில், "நாங்கள் தொடர்ந்து எங்கள் வேலையை செய்ய இருக்கிறோம். எந்த விதி மீறலிலும் ஈடுபடவில்லை. நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச ஊடகங்கள் பலவும் மரியாவுக்கு தனது ஆதரவை வழங்கியுள்ளன. (ம)

## பாலியல் துஷ்பிரயோகம்

# பொப் பாடகர் கெல்லிக்கு 30 ஆண்டுகள் சிறை!

வொஷிங்டன், ஜூலை 1

பெண்கள் மற்றும் சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அமெரிக்காவை சேர்ந்த பொப் பாடகர் கெல்லிக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 மாதங்களுக்கு முன்பு பொப் பாடகர் கெல்லி மீது பாலியல் குற்றச்சாட்டு முறைப்பாடுகள் எழுந்தன. மேலும் பல ஆண்டுகளாக சிறுமிகளை வன்கொடுமை செய்து வருகிறார் எனவும் அவர் மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டது.

இதையடுத்து அவர் கடந்த மாதம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணையில், பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது கெல்லி பாலியல் ரீதியாக துன்புறுத்தல் செய்தமை நிரூபணமாகியுள்ளது.

இதையடுத்து பொப் பாடகர் கெல்லிக்கு 30 ஆண்டு சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ச-இ)

## புடின் பெண்ணாக இருந்தால் உக்ரைன் போர் நடந்திருக்காது

*போரிஸ் ஜோன்சன் சர்ச்சைக் கருத்து*

பெர்லின், ஜூலை 1

புடின் ஒரு பெண்ணாக இருந்திருந்தால் உக்ரைன் போர் நடந்திருக்காது என்று பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் போர் குறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ரஷ்ய அதிபர் புடின் ஒரு பெண்ணாக இருந்திருந்தால் பைத்தியக்காரத்தனமான ஆடம்பரமான வன்முறையை நிகழ்த்தியிருக்கமாட்டார். உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் என்பது நச்சுமிக்க ஆண்மைத்தனம்.

மக்கள் அனைவரும் போர் நின்று அமைதி ஏற்படவேண்டும் என விரும்புகிறார்கள்.

ஆனால் இப்போதுவரை அதற்கான எந்த ஒப்பந்தத்தையோ அல்லது அமைதிக்கான வேண்டுகோளையோ புடின் இதுவரை தெரிவிக்கவில்லை- என்றார். (ச-இ)

# நேட்டோப் படைகளை வரவேற்றால் கடும் விளைவை சந்திக்க நேரிடும்

## சுவீடன், பின்லாந்துக்கு புடின் எச்சரிக்கை

மொஸ்கோ, ஜூலை 1

நேட்டோ படைகள் மற்றும் இராணுவ உட்கட்டமைப்புக்கு சுவீடன் மற்றும் பின்லாந்து அனுமதி வழங்கினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என ரஷ்ய அதிபர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேட்டோ உறுப்பு நாடுகளான சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகள் இணைவதற்குத் துருக்கி எதிர்ப்புத் தெரிவித்தது. தற்போது சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகிய இரு நாடுகள் இணைவதில் இருந்த துருக்கியின் எதிர்ப்பு விலகியுள்ளது. இதற்கென முத்தரப்பு நாடுகளுட [illegible] ஜனாதிபதி பைடன், சுவீடன் மற்றும்



பின்லாந்து ஆகிய இரு நாடுகளும் தகுதி வாய்ந்த இராணுவக் கட்டமைப்பைக் கொண்ட வலிமையான ஜனநாயக நாடுகள்.

அவர்கள் நேட்டோவின் உறுப்பினராவது அதன் கூட்டுப் பாதுகாப்புக்கு வலிமை சேர்க்கும். இதற்காக சுவீடன், பின்லாந்து மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் மேற்கொண்ட முத்தரப்பு ஒப்பந்தத்துக்கு வாழ்த்து எனத் தெரிவித்தார். இந்த நிலையில்

ரஷ்ய அதிபர் புடின் அதற்குப் பதிலடியாக நேட்டோவில் சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் இணைவது குறித்து ரஷ்யா கவலை கொள்ளவில்லை. அவர்கள் சேர விரும்பினால் சேர்ந்து கொள்ளட்டும்.

ஆனால், ஒன்றை தெளிவாகவும், சரியாகவும் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு முன்புவரை அந்தப் பகுதிகளில் இருந்து எமக்கு அச்சுறுத்தல் எதுவும் ஏற்படவில்லை.

ஒருவேளை அந்தப் பகுதிகளில் இராணுவப் படைகள் குவிக்கப்பட்டு அல்லது இராணுவ உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு எங்களுக்கு எதிராக அச்சுறுத்தல் விடப்பட்டால், அதற்கு எங்கள் தரப்பில் இருந்து பதிலடி தரப்படும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















ஆசிரியருக்கான கடிதம்

# திணைக்களங்கள் ஊடாக அரச அலுவலருக்கு எரிபொருள்

தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை சுலபமாக்குவதற்கான ஆலோசனை ஒன்றை முன்வைக்கலாமென நினைக்கிறேன். இங்கு கூறப்போகும் விடயத்தைப்பற்றி சிந்திப்பதும் சிந்திக்காமல் விடுவதும் அதிகாரிகளின் முடிவு. அதில் எம்மால் தலையிட முடியாது.

1990-1995 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பெற்றோலைக் கண்ணாலும் காணமுடியாது. இருந்தும் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்குப் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. கப்பல் மூலம் பெற்றோல் எடுத்து வரப்பட்டு வேம்படி மகளிர் கல்லூரியில் வைத்து தலா நான்கு லீற்றர் வீதம் பரீட்சை ஒருங்கிணைப்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. பரீட்சை மேற்பார்வையாளர்கள் கொள்கலன்களுடன் வந்து பெற்றோலைப் பெற்றுச்சென்றனர்.

முதலாம் திகதி முதல் அட்டைக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்படவுள்ளதாக மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார். இதேவேளை- பொதுமக்களுக்கும் அட்டைக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்படவுள்ளது. இந்த நடைமுறையில் நிச்சயமாக குழப்பங்கள் ஏற்படும். எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் வந்துவிட்டது என்பதை அறிந்தவுடன் பொதுமக்களும் அரச உத்தியோகத்தர்களும் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குப் படையெடுப்பர். அப்போது நிச்சயமாக குழப்பங்கள் ஏற்படும்.

எனவே அரச ஊழியர்களுக்கான எரிபொருளை அந்தந்த திணைக்களங்கள் ஊடாக விநியோகிக்கும் பட்சத்தில், ஆசிரியர்கள் கைக்குழந்தையுடன் நிலத்தில் அமர்ந்து ஒப்பாரி வைக்கும் நிலையோ, மருத்துவ அதிகாரிகள் தாக்கப்படும் நிலையோ, மருத்துவ அதிகாரிகள் தமக்குரிய எரிபொருள் அட்டையைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு நான் ஒரு மருத்துவர் என உரத்துக்கத்தும் நிலையோ ஏற்பட வாய்ப்பில்லை.

அரச அதிகாரிகளும் பொதுமக்களும் முரண்பட வேண்டிய நிலை ஏற்பட வாய்ப்பில்லை. அரச அலுவலகங்களிலும், பாடசாலைகளிலும், மருத்துவமனைகளிலும் சேவைகள் ஒழுங்காக நடைபெறும்.

தற்போது வடக்கிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ரௌடிகளின் கூடாரமாக மாறிவிட்டன. பொலிஸாரும் இவர்களைக் கண்டுகொள்வதில்லை பிரபல மகளிர் கல்லூரி ஆசிரியை ஒருவர் சொன்னதுபோல "பெற்றோல் செற்றிலை நிக்கிறவங்கள் ஆட்களை மனிசராயே மதிக்கிறேல்லை. அவங்கடை பேச்சுக்கள் ஏச்சுகள் எல்லாத்தையும் வேண்டிக்கொண்டு இப்பிடி ஒரு பெற்றோல் அடிக்க வேணுமே" என்ற மனநிலைதான் உள்ளது.

எனவே அரச ஊழியர்களுக்கான எரிபொருளை அந்தந்த திணைக்களங்கள் ஊடாக விநியோகிப்பதே பொருத்தமானது.

**ந.பரமேஸ்வரன்**

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்

# சர்வதேசத் தலையீடு உடனடியாகத் தேவை

## உறவுகள் வலியுறுத்து



கிளிநொச்சி, ஜூலை 1

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தில் சர்வதேசம் உடனடியாகத் தலையிட்டு எமக்கான தீர்வை உடனடியாகப் பெற்றுத்தர வேண்டும் என்று வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கிளிநொச்சியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

1932 நாள்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மாதாந்தம் 30ஆம் திகதி கவனவீர்ப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாகவே நேற்றைய போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

'இந்த அரசாங்கம் எமது பிள்ளைகளைக் காணாமல் ஆக்கிவிட்டு பொருளாதாரத்தாலும் எம்மை நசுக்குகின்றது. போர்க்காலத்தில்கூட இவ்வாறான பொருளாதார நெருக்கடியை நாங்கள் எதிர்கொள்ளவில்லை. இவ்வாறான நிலையில் சர்வதேசம் தலையீடு செய்து எம்மையும், எமது பிள்ளைகளையும் மீட்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ம-113)

# சமுர்த்தி நிவாரணத்துக்கு விண்ணப்பங்கள் கோரல்

சாவகச்சேரி, ஜூலை 31

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறத் தகைமை இருந்தும் இதுவரை விண்ணப்பிக்கா தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட சமுர்த்திப் பயனாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவும், சமுர்த்தி நிவாரணத்துக்கு விண்ணப்பித்து இதுவரை நிவாரணம் கிடைக்காதவர்கள் காத்திருப்போர் பட்டியலில் இணைக்கப்பட்டும் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய சமுர்த்தி நிவாரணம் பெறத்தகைமையுள்ளவர்கள் விவரங்களை தமது பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் மற்றும் வலய சமுர்த்தி வங்கி ஊடாக பிரதேச சமுர்த்தித் தலைமையகத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அராலி மேற்கு, நீளத்திக்காடு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயத்தின் வேட்டைத் திருவிழா கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. நீளத்திக்காடு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயத்தில் ஆரம்பமான வேட்டைத்திருவிழா, அராலி மத்தி ஊரத்தி பேச்சியம்மாள் ஆலயத்தில் நிறைவுற்றது. (ஒ-14)

# திக்கம் வடிசாலை மீளவும் ஜனவரியில் திறக்கப்படும்!

## பனை அபிவிருத்தி சபை தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 1**

**வடக்கு மாகாணத்தில் பனம்பொருள் உற்பத்தித்துறையை ஊக்குவிப்பது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த பலவருடங்களாக மூடப்பட்டுள்ள திக்கம் வடிசாலையை ஜனவரி மாதமளவில் மீண்டும் திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிருஷாந்த பத்திராஜ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'பனம் உற்பத்திப் பொருள்களுக்கு கொழும்பு, கண்டி, மாத்தறை, காலி ஆகிய பிரதேசங்களில் பெரும் சந்தைவாய்ப்புகள் காணப்படுகின்றன. எனவே, பனை உற்பத்திப் பொருள்களை தென் மாகாணத்துக்கு கொண்டுசென்று அங்கு சந்தை வாய்ப்புகளை அதிகரிப்ப தற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

விசேடமாக, திக்கம் வடிசாலையை மீள ஆரம்பிப்பதன் ஊடாக, யாழ். மாவட்டத்தில், கள் உற்பத்தியில் ஈடுபடுவர்களிடமிருந்து அதிகளவான கள்ளைப் பெற்றுக்கொள்ள முடியும். வடிசாலை மீள திறக்கப்படுமாயின் நாளொன்றுக்கு 30 ஆயிரம் லீற்றர் கள் தேவைப்படும்.

இவ்வாறு கள்ளை விலைக்கு பெறுவதன் மூலம் 20 முதல் 27 லட்சம் ரூபாய் வருமானத்தை கள் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களால் பெற்றுக்கொள்ள முடியும். இதனூடாக கள் உற்பத்தியில் ஈடுபடுவர்களின் வாழ் வாதாரம் அதிகரிக்கும். இந்த தொழிற்சாலையை மீளத் திறப்பதனூடாக, தொழிற்சாலையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மதுபானத்தை தேசிய ரீதியில் மட்டுமன்றி, ஐரோப்பிய நாடுகளுக்கும் அனுப்புவதனூடாக பனை என்ற நாமத்தை சர்வதேச ரீதியில் நிலைநிறுத்த நாம் எதிர்பார்க்கின்றோம்' -என்றார்.

இதேவேளை திக்கம் வடிசாலையின் உரிமம் வடமராட்சிப் பகுதியில் உள்ள பனைசார் உற்பத்தியாளர்களின் கடும் எதிர்ப்பையும் மீறி தென்னிலங்கையைச் சேர்ந்த நிறுவனமொன்றுக்கு பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிருஷாந்த பத்திராஜவால் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் இந்தத் தாரைவார்ப்பு நடவடிக்கை வடமாகாண தொழிலாளர்களுக்குச் செய்த பெரும் துரோகம் என்றும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் அண்மையில் கடுமையாக விமர்சித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## உணவுப் பாதுகாப்புக் குழு அமைக்க அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூலை 1

உணவுப் பாதுகாப்புக் குழுவொன்றை நியமிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் கடந்த திங்கட் கிழமை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு அமைச்சால் இந்தப் பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு தொடர்புடைய நிறுவனங்களின் பிரதானிகளைச் சந்தித்து சந்தையிலுள்ள அத்தியாவசிய பொருள்களின் கையிருப்புக் குறித்து மீளாய்வு செய்யவுள்ளது. (ச-இ)



## நெருக்கடிக்கு தீர்வு கோரி கையெழுத்து சேகரிப்பு

வவுனியா, ஜூலை 1

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி வவுனியா இலுப்பையடிச் சந்தியில் கையெழுத்து சேகரிப்பு நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

"பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணக் கோரி, பட்டினிச் சாவைத் தடுக்க மக்களே முன்வாரீர்" எனும் தொனிப்பொருளில் சிறிலங்கா அரசாங்கத்துக்கு எதிராக 25 ஆயிரம் பேரின் கையெழுத்து சேகரிப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட கையெழுத்து சேகரிப்பில் இன, மொழி பேதங்களுக்கு அப்பால் பல மக்கள் கலந்து கொண்டனர். (ஒ-14-110)



## நெருக்கடி நிலையிலும் மக்களுக்கான சேவையை முழுமையாக வழங்குங்கள்

### ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையிலும் மக்களுக்கான சேவைகளை அரசாங்க ஊழியர்கள் முழுமையாக வழங்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய நெருக்கடியில் அரசாங்க அலுவலர்களுக்கு வாகனங்களுக்கான எரிபொருள் வழங்கும் நடைமுறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய அனைத்து அரசாங்க சேவைகள் தொடர்பில் மாவட்டச்செயலர்கள், பிரதம செயலர், அமைச்சுச் செயலர்கள் போன்றோர் ஒருங்கிணைந்த அடிப்படையில் கண்காணிப்புச் செய்ய வேண்டும்.

மக்களின் சில சேவைகளை ஒரு சில மணி நேரங்களில் முடித்து வழங்க வேண்டும். அத்துடன் பிற சேவைகளை ஆகக் கூடுதலாக 7 நாள்களுக்கு மேல் தாமதமாக்கக் கூடாது.

மாகாண மட்டத்தில் சேவைகள் மற்றும் தேவைகளை நிறைவு செய்ய தாமதப்படுத்தும் அதிகாரிகள்,அலுவலர்கள் தொடர்பில் அறியத்தரும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதுடன் மாகாணத்துக்கு வெளியே உடன் இடமாற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (ஒ-14-50)

# இந்தியத் தூதரகத்தின் நட்புறவு கிரிக்கெட் போட்டி



யாழ்ப்பாணம், ஜூலை 1

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம் "ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்" கொண்டாட்டங்களின் பகுதியாக யாழ்.இந்திய துணைத் தூதரகம் மற்றும் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையிலான சிநேகபூர்வமான 16 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி யாழ்.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் மற்றும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைகள உதவிப் பணிப்பாளர் ராஜமல்லிகை ஆகியோர் போட்டியை ஆரம்பித்து வைத்தனர். போட்டியின் நிறைவில் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கி போட்டியில் பங்கேற்றவர்களைக் கௌரவித்தனர். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் ஜனநாயகப் போராட்டங்களை பயங்கரவாதச் சட்டத்தால் தடுக்காதீர்!

**கொழும்பு, ஜூலை 1**

**இலங்கையைப் பொறுத்தமட்டில் பொதுமக்கள் ஏன் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றார்கள் என்ற காரணத்தை அறிந்துகொள்வதற்கும் தீர்வை வழங்குவதற்குமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதைவிடுத்து, மக்களின் போராட்டங்களை பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அரசாங்கத்தின் நிறைவேற்றுத் தீர்மானங்களால் அடக்குவது தகாது என்று ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் கிளெமென்ட் நியாலெற்சொஸி வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையில் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தைப் பொறுத்தமட்டில், சில ஒன்றுகூடல்களைத் தடுக்கும் வகையில் அரசாங்கத்தினால் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றன.

குறித்த தரப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான காரணம் மற்றும் அவர்களது அதிருப்தி என்னவென்பதை அறிந்துகொள்வதற்கான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்குப் பதிலாக, நிறைவேற்றுத்தீர்மானத்தின் ஊடாக அந்த ஆர்ப்பாட்டங்கள் அடக்கப்படுகின்றன. அதுமாத்திரமன்றி பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஆர்ப்பாட்டங்களுக்கான விடையாக பொலிஸார் பிரசன்னமாவதுடன், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையை மீறும் வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைதுசெய்யப்படுகின்றனர்.

போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுடன் தொடர்புடைய விவகாரங்களுக்கான பொறுப்புக்கூறல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமத்துவமான சமூக மற்றும் பொருளாதாரக் கொள்கைகள், சிறந்த வேலைச்சூழல் மற்றும் கல்விக்கான உரிமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கோரி அமைதியான முறையில் போராடும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆகவே இலங்கை அரசாங்கம் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பில் தெளிவானதும், சட்டத்துக்கு அமைவானதுமான வழிகாட்டல்களைத் தயாரிக்கவேண்டியது அவசியமாகும்.

அத்தோடு அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான தமது சட்ட உரிமையைப் பயன்படுத்தும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் குற்றவாளிகளாக்குவதற்கு பயங்கரவாதத்தடைச்சட்டம் உள்ளிட்ட தேசிய பாதுகாப்புச்சட்டங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அரசாங்கமானது அர்த்தமுள்ள பாதுகாப்புக்கட்டமைப்பு மறுசீரமைப்பை மேற்கொள்வதுடன், இராணுவமயமாக்கலை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

அத்தோடு நாடாளுமன்றப்பேரவை, காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட முக்கிய கட்டமைப்புக்கள் உரியவாறு இயங்குவதற்கு அவசியமான உதவிகள் வழங்கப்படவேண்டும் -என்றுள்ளது. (ம)

## எரிபொருளுக்கு காத்திருந்தவர் விபத்தில் சாவு

எரிபொருள் வரிசையில் காத்திருந்த ஒருவர் லொறி மோதியதில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அளுத்கமவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. அதேபகுதியைச் சேர்ந்த 53 வயதான ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இரவு முழுவதும் அளுத்கம தர்கா நகர் எரிபொருள் நிலையத்தில் காத்திருந்துவிட்டு நேற்றுமுன்தினம் அதிகாலை வீட்டுக்குச் செல்லப் புறப்பட்ட வேளை மத்துகம நோக்கி பயணித்த லொறி அவர் மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸார் லொறியின் சாரதியைக் கைதுசெய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)


**காணி விற்பனைக்கு**

கோப்பாய் வடக்கு
பருத்தித்துறை வீதியில்
பிரதேச செயலகத்தின்
அண்மையில்
5 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

**074 292 5923**

CS 19859 (3.6)


## குருந்தூர்மலையில்

# பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடியவருக்கு அச்சுறுத்தல்கள்

### துப்பாக்கிமுனையில் விடுக்கப்பட்டது என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு




**யாழ்ப்பாணம், ஜூலை 1**

குருந்தூர்மலைப்பகுதியில் புத்தரின் சிலையை நிறுவ முற்பட்ட நிலையில் அதனை தடுக்கப் போராடிய ஒருவருக்கு துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலைப்பகுதியில் கடந்த 13ஆம் திகதியன்று புத்தரின் சிலையை நிறுவ முற்பட்ட நிலையில், அந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை போராட்டம் மூலம் தடுக்கப்பட்டது. இந்த நிலையில் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட நபரொருவருக்கு கடந்த 15ஆம் திகதியன்று இரு நபர்களால் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அவரை அச்சுறுத்திய நபர்கள் அருகிலுள்ள இராணுவ முகாமுக்குள் சென்றனர். இந்தப் பிரச்சினைக்குப் பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டவர் இடம்பெயர்ந்து வேறு பகுதியில் வசிக்கின்றார்.

இதுபற்றி பொலிஸாரிமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கம் ஜெனிவாவுக்கு ஜூலை மாதம் சென்று பல கதைகளைக் கூறவிருக்கும் நிலையில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தற்போதைய நாட்டின் நெருக்கடி நிலையிலும், அரசாங்கம் தமிழ்த் தேசத்தை அழிக்கும் செயற்பாடுகளில் முனைப்பாக செயற்படுகின்றது என்றார். (ம-26)

# மரண அறிவித்தல்



## திரு. விசுவலிங்கம் செல்வநாயகம்

**(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் யாழ்.மாநகரசபை)**

சிறுப்பிட்டியை பிறப்பிடமாகவும் புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.விசுவலிங்கம் செல்வநாயகம் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் யாழ். மாநகரசபை) அவர்கள் நேற்று (30.06.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்-தண்டிகைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி குஞ்சுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் இரஞ்சிதமலரின் அன்புக்கணவரும் சுகிர்தாம்பாள், இராசரத்தினம், ஜெயராசா மற்றும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, நாகராசா, ராஜாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரரும் கிருஸ்ணராஜா, கோடீஸ்வரன், யோகமலர், அருட்குமரன், அருந்ததி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் வனஜா, சிவகரன், முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சாருஜா, யதுசா, பிருந்தா, நிருசன், டெய்ஸி, ஆரண், ரயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகள்:யோகா - 074 277 3981

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதிதுணை

## சாவகச்சேரி , கல்வயல், பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

### 2022 சுபகிருது வருஷ

## தசதின மகோற்சவப் பெருவிழா

* துவஜா ரோகணம் - 04.07.2022 திங்கள் காலை 10.00 மணி
* சப்பை ரதம் - 11.07.2022 திங்கள் மாலை 8.00 மணி
* இரதோற்சவம் - 12.07.2022 செவ்வாய் காலை 10.00 மணி
* தீர்த்தோற்சவம் - 13.07.2022 புதன் காலை 10.00 மணி

**ப்ரதான மஹோற்சவ கிரியா குரு**
**பிரம்மஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்**
(பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயம்)
அவர்களின் ஆசிகள் அனுசரணைகளுடன்
**பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் சக்திதரக் குருக்கள்** அவர்கள்

* தினசரி விழாக் காலங்கள் காலை 9.00 மணி மாலை 5.00 மணி

அடியவர்கள் தவறாது விழாக் காலங்களில் விநாயகப் பெருமானை தரிசித்து இம்மண்ணில் நல்லவண்ணம் ஸகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வு வாழ்வீராகுக.

**தேவஸ்தான தர்மபரிபாலன சபை**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர்
**திருமதி ரேவதி குமரசிறி** அவர்களின்
அன்புத் தாயார்

### அமரர் தங்கம்மா செல்வராஜா



பிறப்பு 28.06.1942 இறப்பு 29.06.2022

அவர்கள் 29.06.2022 அன்று இயற்கை எய்திவிட்டார். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

**ஆசிரியர் கழகம்**
**யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை.**

(cs 19854) (2.6)

## திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டிக்குத் தூக்கு!

*பொதுமக்கள் அதிரடி*



எரிபொருள் வரிசைகளில் திருட்டுக்களில் ஈடுபட்ட குழுவொன்றின் முச்சக்கர வண்டியை பொதுமக்கள் இணைந்து பொது வெளியில் கட்டித் தொங்கவிட்ட சம்பவம் ராஜகிரிய - ஒபேசேகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் எரிபொருளுக்காக பொதுமக்கள் தமது வாகனங்களை வரிசையில் நிறுத்தியபோது, அவர்களின் வாகனங்களை நுட்பமாக அவதானித்த சிலர் அந்தந்த வாகனங்களில் உதிரிப்பாகங்கள் மற்றும் பெற்றோல்என்பனவற்றைத் தொடர்ச்சியாகத் திருடி வந்துள்ளனர். அவ்வாறு திருட்டில் ஈடுபடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டி பொதுமக்களால் அடையாளம் காணப்பட்டு மடக்கிப் பிடிக்கப்பட்டு பொதுவெளியில் கட்டித் தொங்கவிடப்பட்டது. (ம)

## விற்பனைக்கு

யாழ்.வைமன் வீதியில் 6 பரப்பு காணியும். யாழ்.கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும். யாழ்.செட்டித் தெருவில் 2 ½ பரப்பு காணியும். யாழ்.றக்கா வீதியில் 2 பரப்புடன் காணியும் வீடும். ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 10 பரப்பு காணியும் 5 ½ பரப்பு காணியும் வீடும். யாழ்.கந்தப்பசேகரம் வீதியில் 10 பரப்புக்காணியும் யாழ். பிறவுண் வீதியில் 4 ½ பரப்பும் வீடும் 2 ½ வீடும். யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் 16 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும் யாழ்.பஸ் தரிப்பிடத்திற்கு பின்னால் மின்சார நிலைய வீதியில் 30 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடி கடையும் யாழ்.பலாலி வீதியில் தபால் பெட்டி ஒழுங்கையில் 3 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 077 7232 535**

PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2020 வரையும் **அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 23.07.2022 (சனிக்கிழமை) ஆகிய திகதியில் காலை** 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ். ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ். பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ்.கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்,

**நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி : 22.07.2022**
**ஏலவிற்பனை நடைபெறும் இடம் : யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை**
**திகதி : 23.07.2022 (சனிக்கிழமை)**

அறிவித்தலின்றி திகதியை ஒத்திபோடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

தொ.பே.இல. : 021-222 2601 / 021-222 8602
தொலை நகல் : 021-222 2602
ஈ-மெயில் : jafrho@peoplesbank.lk

(cr36280) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 01 . 1929 — மறைவு 30 . 06 . 2022



### கந்தையா தம்பிராசா

(Rtd Investigation Inspector of Postal Department - I.I)

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் இல.78, யாழ் இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிராசா ( Rtd Investigation Inspector of Postal Department - I.I) 30.06.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா, நல்லபிள்ளை தம்பதியின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, பொன்னம்மா தம்பதிகயின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விஷாலாட்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, பாலசிங்கம், தியாகராசா, ராஜேஸ்வரி மற்றும் பத்மசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தமிழருவி த.சிவகுமாரன், சிவபாலன் (ஆசிரியர்), சிவகணேசன் (செய்தி ஆசிரியர்-தினக்குரல்), சிவராணி (சிரேஸ்ட விரிவுரையாளர், மொழியியல் துறை - யாழ் பல்கலைக்கழகம்), சிவசோதி (ஆசிரியர், யாழ் ஆனைப்பந்தி M.M.V) ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரதேவி, கலாராணி, பேராசிரியர் சி.சிறீசற்குணராசா (துணைவேந்தர்-யாழ்.பல்கலைக்கழகம்), சுதர்ஜனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனகன் (Chartered Engineer), கௌதமன் (Senior Software Engineer), மதங்கன் (தாதியர் பீடம் யாழ்.பல்கலைக்கழகம்), பராபரன் (மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்), பவித்திரன் (விஞ்ஞான பீடம், யாழ் பல்கலைக்கழகம்), சிறிசங்கர்ஷன் (யாழ் இந்துக்கல்லூரி), தாமிரா (யாழ் இந்து மகளீர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2022) மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.78, யாழ் இந்துக்கல்லூரி ஒழுங்கை,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 20 . 07 . 1937 — உதிர்வு 30 . 06 . 2022



### திரு.சின்னக்குட்டி செல்வநாயகம்

**(ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் யா/ தந்தைசெல்வா தொடக்க நிலைப்பள்ளி தெல்லிப்பழை, முன்னை நாள் உப அதிபர் இளவாலை மெய்கண்டான் ம.வி).**

யாழ். புத்தூரைப் பிறப்பிடமாகவும் அம்பனை, மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னக்குட்டி செல்வநாயகம் அவர்கள் நேற்று (30.06.2022) வியாழக்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு சின்னக்குட்டி மற்றும் சின்னக்குட்டி செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை, பொன்னு தம்பதியரின் அன்பு மருமகனும், சுதாமதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, இலங்கை) அவர்களின் ஆருயிர் கணவரும், கணேசானந்தன் (பொறியியலாளர், கனடா), மதிவதனி (வைத்தியர், கொழும்பு தேசிய வைத்தியசாலை), குகநாதன் (கனடா ) ஆகியோரின் பாச மிகு தந்தையும், நாகரத்தினம் (கனடா), குணரத்தினம் (யாழ்ப்பாணம்), சிவதர்ஷினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சேயோன் (கனடா), கயல் (கனடா), செல்வ நீதன் மற்றும் நவநீதன் (கொழும்பு இந்து கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் ஆசை பேரனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், விஜயரத்தினம் ஆகியோரதும், மற்றும் மனோன்மணி (கனடா), லோகேஸ்வரன் (கனடா), நவரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரரும், திவ்வியா கெங்கேஸ்வரன் (அவுஸ்ரேலியா), பராபரன் ராதா கிருஷ்ணன் (கனடா) அகியோரின் பாசமிகு சீனியப்பாவும், காலஞ்சென்ற சரஸ்வதி, சுலோச்சனாதேவி ஆகியோரதும், மற்றும் சபாரத்தினம் (கனடா), இராசேஸ்வரி (கனடா), கமலராணி (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.07.2022) வெள்ளி காலை 8:30 -12:00 மணிக்குப் பார்வைக்கு வைக்கப்பட்டு தகனக் கிரிகைகள் மதியம் நடைபெறும்.

**இடம்: Mahinda Funeral and Florists. 591, Galle Rd Mount Lavinia, 10370, Sri Lanka.** 011 271 2476.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மதிவதனி (மகள் ): +94 77 985-0025.**
**குகநாதன் (மகன் ):+1(613) 294- 0928.**
**கணேஷானந்தன் (மகன்): +1(416) 303- 4614**

**தகவல்: குடும்பத்தினர்**

(CR 36294) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை மயிலிட்டி உப அலுவலகம் ஆதன உரிமையை உறுதிப்படுத்தல்

**விண்ணப்பதாரர் - பாலர் ஞானோதய சங்கம்**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட கட்டுவன் மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான் எனும் முகவரியில் அமைந்துள்ளதும் 3026 ஆம் இலக்க 20.06.2018 ஆம் திகதிய, பிரசித்த நொத்தாரிசு ஏ.நடேசன் முகதாவில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வந்தடைந்ததுமான தெல்லிப்பளை கோவிற்பற்று கட்டுவன் இறை " வளமாரி " நிலப்பரப்பு நான்கு குழி சைவர் இரண்டு தசம் மூன்றும் (நிலப்பரப்பு 04 குழி 02.3). இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் வி.மகேந்திரன் அவர்களால் 03.12.2017 ஆம் திகதி 1167 இலக்கத்தில் அளந்து வரைந்த வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்தை பாலர் ஞானோதய சங்கம் என்ற பெயரிற்கு ஆதன உரிமையை உறுதிப்படுத்த விண்ணப்பித்துள்ளனர்.

குறித்த ஆதனமானது தெல்லிப்பளை கட்டுவனில் 1922 ம் ஆண்டு தொடக்கப்பட்ட பாலர் ஞானோதய சங்கத்தினது என்றும் பின் நாட்டில் இயல்பு நிலை குழம்பி இடப்பெயர்வு ஏற்பட்டதால் குறித்த சங்கத்தின் முக்கிய ஆவணங்களும் ஆதனடாப்பில் காட்டப்படும் இச்சங்கத்தின் காணி உறுதியும் தொலைந்துவிட்டதால் தற்போதைய தலைவர் நமசிவாயம் பாலச்சந்திரன் செயலாளர் வல்லிபுரம் இராசதுரை (தே.அ.அ.இல - 401842284V) பொருளாளர் அருள்தாஸ் (தே.அ.அ.இல - 482672906V) ஆகியோரால் காணி வெளிப்படுத்தல் உறுதியாக எழுதப்பட்டுள்ளது.

இடப்பெயர்வுக்கு பின் மக்கள் தங்கள் இடங்களுக்கு சென்று மீளக் குடியமர்ந்ததால் இப்போது குறித்த பாலர் ஞானோதய சங்கம் மீண்டும் சங்கத்திற்கு உரித்தான காணியில் இயங்கத்தொடங்கியுள்ளது எனவும் குறித்த இச்சங்கத்தின் காணியை உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.மகேந்திரன் அவர்களால் அளந்து இக் காணிக்கு ஒரு நில அளவைப்படத்தை தயாரித்துள்ளனர்.

**ஆதன விபரம்**

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று கட்டுவன் இறை வலி வடக்கு பிரதேசசபை வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு J/ 238 கிராம அலுவலர் பிரிவு "வளமாரி" நிலஅளவையாளர் வி.மகேந்திரன் அவர்களால் 03.12.2017 ஆம் திகதி 1167 இலக்கத்தில் அளந்து வரைந்த வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு நான்கு குழி சைவர் இரண்டு தசம் மூன்றும் (நிலப்பரப்பு 04 குழி 02.3). இதற்கான எல்லைகள்

கிழக்கு - ஆனந்த சுந்தரம் பெண் திரௌபதிக்குரிய ஆதனம் சின்னத்துரை பெண் அன்னம்மாவுக்குரிய ஆதனம்

வடக்கு - தெல்லிப்பளை - அச்சுவேலி றோட்

மேற்கு - கையொழுங்கை

தெற்கு - சிவராசா பெண் பாலசரஸ்வதியின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை பாலர் ஞானோதய சங்கத்தின் பெயரிற்கு ஆதன உரிமையை உறுதிப்படுத்த விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். எனவே பாலர் ஞானோதய சங்கத்தின் பெயரில் ஆதன உரிமையை உறுதிப்படுத்துவது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருப்பின் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனையை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயரிற்கு கட்டட அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இதனால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாகாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிவடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை.**

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



அமரர்

**திரு.R.S.நடராஜா**

(முன்னாள் அதிபர்,
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

**இடம்: சிவபூமி மடம் கீரிமலை**

**காலம்: 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம்: முற்பகல் 10.00**

மேற்படி நிகழ்வில் பங்குகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், பலாலி ஆசிரியகலாசாலை சமூகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மண்ணில் 30.06.1933 விண்ணில் 20.05.2022

குடும்பத்தினர்
0775162487, 077 655 0526
இல.30 - 5/3 நெல்சன் பிளேஸ்,
கொழும்பு - 06

உ
சிவமயம்

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (02.06.2022) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கு

**அமரர் திருமதி மாணிக்கவாசகர் நாகம்மா**

(செம்மலை முல்லைத்தீவு)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தி யேட்டிக் கிரியைகள் நேற்று (30.06.2022) வியாழக்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய கியைகள் நாளை (02.07.2022) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற வுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**விஜயகுமார் தோட்டம்,**
**3 ஆம் கட்டை, சிலாவத்தை,**
**முல்லைத்தீவு.**

(cs.19862) (2.6)

**குடும்பத்தினர்.**
**077 321 1180**

# மரண அறிவித்தல்

## கந்தையா இராசதுரை

### (ஸ்ரான்லி வீதி, ராசா இரும்புக்கடை உரிமையாளர் )



நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா இராசதுரை நேற்று (30.06.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதிய ரின் அன்பு மகனும், பாலசரஸ்வதியின் அன்புக் கணவரும், துஷ்யந்தி, துஷ்யந்தன், துஷாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், டயஸ், மதன்ராஜ், ஜெபினா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜிரோமி, டினோன், கிருஷன், சனாமிகா, பிரவின், சபீதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு எதிர்வரும் (04.07.2022) திங்கட்கிழமை 36, புகையிரத வீதி, கந்தர்மட இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**துஷ்யந்தி (மகள்)**
**076 379 5887**

**பொற்பதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு.**

(cs.19861) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாப்ஸ்...

அதேவேளை - நேற்றும் 800 லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர், கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுகளில் இவை பகிர்ந்தளிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (அ-எ-5)

## திருக்கேதீச்சர...

திகதி திருக்கேதீச்சரப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (அ-எ-213)

## உச்சத்தை...

இந்த மாதத்தில் உணவுப்பொருள்களின் விலைகள் 80 வீதத்தால் அதிகரித்துள்ளன என்று தொகை மதிப்பு புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உணவு அல்லாத பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் 42.4 வீதத்தால் அதிகரித்துள்ளன. எரிபொருள் பற்றாக்குறையால் மரக்கறி வகைகளின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளன.

அரிசி, தானிய வகைகள் உள்ளிட்ட ஏனைய உணவுப் பொருள்களின் விலை கள் அதிகரித்தமையும் இந்த மாதத்தில் பணவீக்கம் அதிகரித்தமைக்கான முக்கியமான காரணமாக அமைந்துள்ளது. (அ-எ-இ)

## மாணவிகள்...

பெற்றோரும், பெண்களும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

பெண்களின் பாதுகாப்பைச் சட்டத்துறையினர் உறுதிப்படுத்த வேண்டும் என்றும், துஷ்பிரயோகங்களில் இருந்து மாணவிகள், சிறுவர்களைப் பாதுகாக்க வலியுறுத்தியும், முல்லைத்தீவு நகர சுற்றுவட்டத்தில் இருந்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் வரை இந்தக் கவனவீர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது.

மாணவிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களுக்கு ஆதரவாக சட்டத்தரணிகள் முன்னிலையாகக்கூடாது என்றும், குற்றவாளிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இதேவேளை- குறித்த துஷ்பிரயோகச் சம்பவம் தொடர்பில் ஆசிரியர் ஒருவரும், மாணவன் ஒருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். நான்கு மாணவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-எ-19)

## பஸ் கட்டணங்கள்...

40 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏனைய கட்டணங்கள் 22 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்தது.

பஸ் தொழிற்சங்கங்கள் கோரிய 40 ரூபா ஆகக் குறைந்த கட்டணம், 30 சதவீதக் கட்டண உயர்வு ஆகிய பரிந்துரைகளை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, போக்குவரத்து அமைச்சிடம் நேற்றுமுன்தினம் கையளித்தது. ஆயினும் போக்குவரத்து அமைச்சு 22 சதவீதக் கட்டண உயர்வுக்கு அனுமதித்ததுடன், குறைந்த கட்டணமாக 40 ரூபாவை நிர்ணயித்துள்ளது. (அ-எ-இ)

## இந்தியாவிடம்...

என்று அரசாங்கத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த டீசல் இருப்பை அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேவேளை, எரிபொருள் நெருக்கடி காரணமாக ஊழியர்கள் பணிக்குச் சமுகமளிக்காவிட்டால் ரயில் சேவைகள் சில நிறுத்தப்படும் என்று ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## கோத்தாபய...

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2020 ஆம் ஆண்டு முதல் நாம் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை பெற்றுக் கொள்ளுங்கள் என்று ஜனாதிபதியிடமும், அரசாங்கத்திடமும் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்தோம். ஆனால் அதை அவர்கள் செவிமடுக்கவில்லை.

அதிகப்படியான பணத்தை அச்சடிப்பதன் விளைவுகள் மற்றும் ஏற்கனவே உள்ள கடனை மறுசீரமைக்கத் தவறியதன் விளைவுகள் தொடர்பாகவும் அவர்களை எச்சரித்தோம். அவை அனைத்துமே புறக்கணிக்கப்பட்டன.

அரசாங்கத்தின் மோசமான தீர்ப்பு மற்றும் பொறுப்பற்ற நடவடிக்கைகளால் ஒட்டுமொத்த நாடும் தற்போது பாதிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி இனியும் பதவியில் இருக்க முடியாது. வேறு ஒரு அணியை பொறுப்பேற்க அனுமதிக்க வேண்டும்.

ஜனாதிபதி பதவி விலக முடியாவிட்டால் அதற்கான காலக்கெடுவை வழங்க வேண்டும். தற்போதைய பிரச்சினைகளுக்கு ஒற்றைக் கட்சி அரசாங்கத்தால் தீர்வு காண முடியாது. நாட்டை முன்னோக்கிகொண்டுசெல்ல அனைத்துக் கட்சிகளுடன் ஒத்துழைப்புடன் ஆட்சி அமைக்கப்படவேண்டும்.

20 மில்லியன் இலங்கையர்களின் துன்பங்களை அவதானிக்கும்போது இனியும் பொறுமை காக்க முடியாது - என்றார். (அ-எ-இ)

## தொடர் சைக்கிள்...

மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது மக்களிடையே சைக்கிள் பாவனை அதிகரித்துள்ள நிலையில், சைக்கிள் திருட்டுக்களும் அதிகரித்துள்ளன.

புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்திருந்த நிலையில், பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். பாதுகாப்புக் கமராப் பதிவுகளைக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நேற்றுமுன்தினம் கைவேலியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். தொடர் விசாரணைகளில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் - உரும்பிராயைச் சேர்ந்த ஒருவரும், உடையார்கட்டைச் சேர்ந்த சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணியாற்றும் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். பொலிஸாரால் 15 சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-19)

## மீளத் திறக்கப்படுகிறது...

தெரியவருகின்றது.

சிறிய நிகழ்வுடன் இன்று விமான நிலையம் மீளத் திறக்கப்படும், விமான சேவைகள் தொடர்பாகப் பின்னர் அறிவிக்கப்படும் என்று விமான நிலையத் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## பல்டி....

கம் விதித்திருந்த தடையை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்ப்பதற்கான உதவிகள் தொடர்பில் கலந்துரையாட எரிசக்தி அமைச்சர் காஞ்சன வீரசேகர கட்டார் பயணித்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அமைச்சர் காஞ்சன வீரசேகர தனது ருவிற்றர் பக்கத்தில், 'கட்டார் தொண்டு நிறுவன அதிகாரிகளைச் சந்தித்தேன். 2019ஆம் ஆண்டு இந்த நிறுவனத்துக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை நீக்கும் தீர்மானத்தைப் பாதுகாப்பு அமைச்சு, சட்டமா அதிபருக்கு அறிவித்துள்ளது' என்று பதிவிட்டுள்ளார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் தொடர்புள்ளவர் என்ற சந்தேகத்தில், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைது செய்யப்பட்டிருந்த நிலையில், அவருக்கு கட்டார் சேரிட்டி தொண்டு நிறுவனம் நிதி உதவி வழங்கியது என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இதனையடுத்து அந்த அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்டிருந்தது. 'கட்டார் சேரிட்டி ' கட்டார் அரசாங்கத்தின் முக்கியமான தொண்டு நிறுவனமாகும். (அ-எ-இ)

## கோத்தா...

மேலும் உக்கிரமடையும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உடனடியாகப் பதவி விலகி வீடு சென்றால்தான் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதிப் பதவியில் இருக்கும் வரைக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவாலும் ஒன்றும் செய்ய முடியாது. அதனால்தான் பிரதமர் ரணில் நாளாந்தம் ஊடகங்கள் முன்னிலையில் பிரச்சினைகளை மாத்திரம் கூறுகின்றாரே தவிர அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கின்றார் இல்லை.

இலங்கையின் தற்போதைய நிலைமை நாளாந்தம் மோசமடைகின்றது. மக்கள் பொறுமை இழந்துவிட்டார்கள். இந்த நாட்டை மீட்க வேண்டுமெனில் ராஜபக்ச குடும்பம் கூண்டோடு வீடு செல்லவேண்டும். அப்போதுதான் நாட்டுக்கு விடிவு கிடைக்கும் - என்றார். (அ-எ-22)

## மஹிந்தவுக்குச்...

சேர்க்கப்பட்டுள்ளார் என்று சமூக வலைத்தளங்களில் தகவல் பரவியது. ஆயினும் அந்தத் தகவல் பொய்யானது என்று முன்னாள் பிரதமரின் செயலாளர் காசிலிங்கம் கீதநாத் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கடும் சுகவீனமுற்ற நிலையில், தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தகவல் வெளியானது. சமூக வலைத்தளங்களில் இந்தத் தகவல் வைரலானதும், பலரும் பலவிதமாகக் கருத்துக்களைப் பகிர்ந்தனர்.

அதையடுத்து இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த முன்னாள் பிரதமரின் செயலாளர், மஹிந்த ராஜபக்ச நலமுடன் உள்ளார் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

## அம்பாள் குளத்தில்...

மாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் குளத்துக்கு நீராடச் சென்றிருந்த நிலையில் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இளைஞரின் உடல் மீட்கப்பட்டு கிளிநொச்சி மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-113)

## தடுத்துவைக்கப்பட்ட...

முன்வைத்துள்ளது.

பொது இடங்களில் முகத்தை மூடும் வகையில் ஆடை அணிவதற்குத் தடை விதித்தல், விற்பனை நிலையங்களில் ஹலால் பொருள்களுக்கு தனிப் பிரிவு, மொழி - இனம் என்ற அடிப்படையில் கட்சிகள் பதிவு செய்வதற்குத் தடை, அவ்வாறான கட்சிகள் பெயர் மாற்றுவதற்கு கால அவகாசம் வழங்கவேண்டும், பெயர்களை மாற்றாத கட்சிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற பரிந்துரைகள் செயலணியால் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், தன்பாலின உறவு குற்றம் என்ற குற்றவியல் கோவைச் சட்டத்தின் 365 "அ" சரத்தை சட்டத்திலிருந்து நீக்குதல், தன்பாலினத் திருமணத்துக்குத் தடை போன்ற பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பர் டீசல் இல்லை

# நோயாளர் காவு வண்டிகள் செயலிழக்கும் அபாயநிலை

**முல்லைத்தீவு, ஜூலை 1**

**சுப்பர் டீசல் இல்லாமையால் வடமாகாணத்தில் சேவையில் ஈடுபடும் அதிநவீன வசதிகளுடன் கூடிய நோயாளர் காவு வண்டிகள் செயலிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**




மத்திய சுகாதார அமைச்சால் அவசர நோயாளர் காவு சேவையை வலுப்படுத்தும் நோக்கில் அதிநவீன வசதிகளுடன் கூடிய 46 நோயாளர் காவு வண்டிகள் வடமாகாணத்துக்கு வழங்கப்பட்டன. இந்த வாகனங்களுக்கு 'சுப்பர் டீசல்' மாத்திரமே பயன்படுத்தமுடியும்.

ஆனால், தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இவற்றுக்கான சுப்பர் டீசலைப் பெறுவதில் கடுமையான சிரமங்களை சுகாதார திணைக்களம் எதிர்கொண்டுள்ளது. இதனால் சில மாவட்டங்களில் குறித்த நோயாளர் காவு வண்டிகள் தற்காலிகமாகப் பாவனையில் இருந்து விலக்கப்பட்ட நிலையில் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில், நோயாளர்களின் தேவை கருதி விலைமதிப்பற்ற மனித உயிர்களின் அவசியம் கருதியும் ஒரு தற்காலிகத் தீர்வாக சுப்பர் டீசலில் இருந்து சாதாரண டீசல் பாவனைக்கு குறித்த வாகனங்கள் மாற்றப்பட்டுள்ளன. ஆனால், இந்த நிலைமையால் குறித்த வாகனங்கள் செயலிழக்கும் தன்மை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி குறித்த வாகனங்களுக்கு சுப்பர் டீசலைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-214)

## சவுக்குக் காட்டுப் பகுதிக்குள் தீப்பற்றும் செயலைத் தவிருங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்.மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மேற்பார்வைக்குட்பட்ட மணற்காட்டின் சவுக்குக் காட்டுப் பகுதிக்குள் செல்லும் சுற்றுலாவிகள், அங்கு தீ பரவக்கூடிய செயற்பாடுகளைத் தவிர்க்குமாறு வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. சவுக்குமரக் காட்டின் கீழ் காணப்படும் காய்ந்த சவுக்க மிலைகளில் இயல்பாகவே தீப் பற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது.

இந்த நிலையில் சவுக்குக் காட்டுப் பகுதிக்குள் தீமூட்டி சமையலில் ஈடுபடல், புகைத்தல் மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு விட்டுச் சென்ற பின்பு தீப் பரவல் ஏற்பட்டு சவுக்கு மரக்காடுகள் அழிவுறும் நிலை காணப்படுகின்றது. இதனால் சுனாமித் தடுப்பாகக் காணப்படுகின்ற சவுக்குமரக் காட்டின் வன மூடுகை குறைவடைந்து செல்கின்றது.

எனவே, எதிர்வரும் காலங்களில் மேற்கூறிய செயற்பாடுகளைத் தவிர்க்குமாறும் அதை மீறிச் செயற்படுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-14,125)


**தேவை**

சொட்டு நீர்ப்பாசன தொகுதி (சோலர் மோட்டருடன்) இருப்பவர்கள் தொடர்புகொள்ளவும்

தொடர்புகளுக்கு

**077 285 0408**


# இலங்கையின் பொருளாதாரத்தை உன்னிப்பாகக் கவனிக்கின்றோம்!

*பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு*



கொழும்பு, ஜூலை 1

அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியாலும் வெளியிடப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று விவரங்கள் உள்ளடங்கலாக, இலங்கையின் பொருளாதார நிலை வரத்தை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் என்று பிரிட்டனின் வெளி விவகார அமைச்சர் விக்கி போர்ட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் பரவலுக்கு முன்னர் சுமார் 30 சதவீதமான வருமானத்தைப் பெற்றுக்கொடுத்த சுற்றுலாத்துறையே இலங்கையின் முக்கியமான வருமான மீட்டல் துறையாகக் காணப்பட்டது. இருப்பினும் கடந்த 2020 ஆம் ஆண்டு சுமார் 80 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த இலங்கையின் சுற்றுலாத்துறை, 2021 ஆம் ஆண்டில் 60 சதவீதத்தால் வீழ்ச்சியடைந் தது. அந்த நாட்டு சுற்றுலாத்துறைக்கான முக்கியமான பங்களிப்பாளராக பிரிட்டன் விளங்குகின்றது. கடந்த மூன்று வருடகாலமாக இலங்கைக்கு மூலப் பொருள்களை விநியோகிக் கும் மூன்று முக்கியமான வழங்குநர்களில் இலங்கையும் உள்ளடங்குகின்றது.

கடந்த மூன்று வருடகாலத்தில் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் பணவனுப்பல்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு முக்கியமான பங்களிப்பை வழங்கிவந்திருப்பதுடன் அவை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே 8 மற்றும் 9 சதவீதமாக அமைந்துள்ளன. இருப்பினும் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் பணவனுப்பல்கள் 2021 ஆம் ஆண்டில் 20 சதவீதத்தினால் வீழ்ச்சிகண்டிருப்பதுடன், இது கடந்த 2011 ஆம் ஆண்டின் பின்னர் பதிவான தரவுகளின் பிரகாரம் மிகவும் உயர்வான வீழ்ச்சியாக அமைந்திருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருப்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இலங்கையை மீண்டும் நிலைபேறான பாதைக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வது குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் மிகவும் ஆழமான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கின்றேன் - என்றார். (ம)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 • 07 • 1968



மறைவு 12 • 07 • 2021

**அமரர் திரு. பொன்னம்பலம் தயானந்தன்**

(அதிபர் - யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை)

திதி: துதியை (01.07.2022)

மண்ணுலகில் விண்மீனாய் உதித்து
விண்ணுலகம் விரைந்து சென்றதேனோ?
நீங்காத நினைவுகள் பல தந்து
நீண்ட தூரம் சென்று
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
உங்களையே தேடுகின்றன விழிகள்
தூய்மை நிறைந்த வெய்யோனே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
புவனேஸ்வரித்தாய் பாதம் பணிகின்றோம்.

**கேணியடி, கொக்குவில் மேற்கு.** நித்தம் உங்கள் நினைவுகளுடன் **குடும்பத்தினர்.**

(cs36291) (2.6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.